வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.10.2023 திங்கட்கிழமை | இதழ் : 303 | பக்கங்கள் : 16

### மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராக:

# செங்கலடியில் திரண்டனர் மக்கள் பொலிஸார் தடுத்ததால் முறுகல்!

மட்டக்களப்பு, ஒக். 09

**மயிலத்தமடு - மாதவனையில் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். செங்கலடியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நகர முனைந்த ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதன்போது இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் ஏற்பட்டதால் அங்கு பதற்றநிலை காணப்பட்டது.**



மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று செங்கலடியில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்க அங்கு வருகை தந்தார். இதன்போதே மேய்ச்சல் தரையை நம்பி வாழும் பண்ணையாளர்களும் மக்களும் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் அமைப்புகள், பொது அமைப்புகள் பங்கேற்றிருந்தன.

இதன்போது கொம்மாந்துறை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அந்தப்

11

## ஹர்த்தால் குறித்து இன்று உரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக். 09

நீதித்துறை மீதான அச்சுறுத்தல் - அடக்குமுறைகளை கண்டித்து வடக்கு- கிழக்கில் இந்த வாரம் ஹர்த்தால் அனுஷ்டிக்க தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன. இந்த நிலையில் ஹர்த்தால் திகதி குறித்து தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலில் தமிழ் கட்சிகள், பொது அமைப்புகளுடன் - சமூக ஆர்வலர்கள், தமிழ் உணர்வாளர்களும்

11

## சகல தரப்பினரையும் ஒன்றாக அழைத்து கலந்துரையாடி தீர்வு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

மட்டக்களப்பு, ஒக். 09

மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை தொடர்பில் பண்ணையாளர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் கரிசனை கொள்வதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் ஒரேமேசையில் அழைத்து கலந்துரையாடி தீர்வு காணப்படும் என்றும் கூறினார்.

தமிழ் உணர்வாளர்கள் குழுவின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனின் ஏற்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பண்ணையாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று

11



## இலங்கை கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதி!

புதுடில்லி, ஒக். 09

இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் இந்த விடயம் தொடர்பில் இரு தரப்பு மீனவர்களும் புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும் எனவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரவித்தார். அந்த நேர்காணலின் விவரம் வருமாறு,

கேள்வி- எமது இரு நாட்டு கடற்பரப்பிலும் வாழக் கூடிய தமிழ் பேசும் மீனவர்கள் பெரிதும்

11

### ரிக்ரொக் மோகம்:

## இரு இளைஞர்களின் உயிர்களை பறித்தது

கொழும்பு, ஒக். 09

ரிக்ரொக் செயலியில் பதிவிடுவதற்காக வாவியில் தோணியில் சென்ற இளைஞர்கள் அது கவிழ்ந்தததில் இருவர் மூழ்கி உயிரிழந்தனர். நால்வர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் மட்டக்களப்பு - நாவலடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

சீலாமுனை பகுதியிலிருந்து 6 இளைஞர்கள் தோணியில் நாவலடியை நோக்கி வந்துள்ளனர். அங்கிருந்து ரிக்ரொக் சமூக வலைதளத்தில்

11

### சோதனை ஓட்டமாக

## நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன் வந்தது கப்பல்!



யாழ்ப்பாணம், ஒக். 09

நாகபட்டினத்திலிருந்து செரியாபாணி கப்பல் நேற்று மதியம் காங்கேசன்துறையை வந்தடைந்தது. காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை ஆரம் பிப்பதற்கான சோதனை ஓட்டமாகவே இந்தக் கப்பல் வந்தது.

நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவையை நாளை செவ்வாய்க்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மெய்நிகர் வழியாக

11

## வர்த்தகரை கொல்ல முயற்சி சிப்பாய்கள் இருவர் கைது!

கொழும்பு, ஒக். 09

வர்த்தகர் ஒருவரை கொலை செய்யும் நோக்கில் மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவ சிப்பாய்கள் இருவர் எல்பிட்டியவில் வைத்து 9 மில்லிமீற்றர் பிஸ்டல் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று எல்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ சிப்பாய்களான இருவரும் பாதாள உலக தலைவர் ரத்கமை விதுரவின் உதவியாளர்கள் என தற்போது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப் படையில், குறித்த வர்த்தகரை கொலை

11

## அடுத்த பத்து வருடங்களில் கிழக்கில் முழுஅபிவிருத்தி!



மட்டக்களப்பு, ஒக். 09

கிழக்கு மாகாணத்தை அடுத்த பத்து ஆண்டுகளில் முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கமைவாக திருகோணமலை மாவட்டம் அபிவிருத்தி செய்யப்படும். அதேபோன்று மகாவலி ஏ மற்றும் பி பிரிவின் கீழ் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

முன்னாள் அமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகம், ஜே. ஆர். ஜெயவர்தத்ன மற்றும் நானும் சமகாலத்தில் அமைச்சரவையில் இருந்தவர்கள். அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை

11

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தலுக்கான பரபரப்பு இன்னும் தொடங்கவில்லையானாலும் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் அதற்கான ஆயத்தங்களும் பேரம்பேசல்களும் நடக்காமல் இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராகக் களம் இறங்குவதை நோக்கமாகக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெற்கில் தனி ஒருவராக பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறாராம்.

சஜித் மீதான நம்பிக்கை மக்கள் மத்தியில் குறைந்திருப்பதை காரணம் காட்டி, தான் வேட்பாளராகலாம் என்பது பொன்சேகாவின் திட்டம். அவருக்கு மறைமுகமாக பலரும் உதவிவருவதும் அதற்கு காரணம்.

அதனால்தான் தானே வேட்பாளர் என்று மற்றவர்களைக் கொண்டு சொல்ல வைக்க பொன்சேகா முயன்றபோது, அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மறுப்புத் தெரிவித்ததும், தமது வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான் என்று அறிவித்ததையும் கடந்த சில நாட்களில் நாம் கண்டோம்.

இந்த மாதக் கடைசியில் ராஜபக்ஷக்களின் ஆதரவு- அல்லது அவர்கள் பற்றிய கணிப்பு மக்கள் மத்தியில் எப்படி இருக்கின்றது என்பதை கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவர் மூலம் நாடு முழுவதும் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்துவதற்கு பொதுஜன பெரமுன திட்டமிட்டிருப்பது பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அந்த கருத்துக்கணிப்பு எப்படி வருகின்றது என்பதைப் பார்த்து, அந்த முடிவுகளை காட்டி தம்முடனிருந்து பிரிந்து தனித்து இயங்கி வரும் சில உதிரிகளையும் மீண்டும் தங்கள் பக்கம் சேர்க்கலாம் என்று நம்பிக்கொண்டிருக்கின்ற ராஜபக்ஷ தரப்பினர், தமக்கு கணிசமான வாக்குகள் கிடைக்கும் என்று நம்பும்பட்சத்தில் தமது தரப்பில் ஒரு வேட்பாளரை முன்நிறுத்துவதற்கும் யோசித்து வருகின்றனராம்.

தங்கள் ஆதரவுத்தளம் என்பது ஆகக்குறைந்தது இருபத்தி ஐந்து இலட்சமாவது இருக்கும் என்று நம்பும் ராஜபக்ஷ தரப்பினர் அதற்கான பேச்சுகளை ஏற்கனவே தொடங்கிவிட்டனராம். அவர்களைப் பொறுத்தவரை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளரை நிறுத்தாவிட்டால், அது கட்சிக்கு மேலும் பின்னடைவை தரும் என்று நம்புகின்ற அதே வேளை, அவ்வாறு ஒருவரை போட்டியிடவைப்பதன் மூலம் அதற்கு அடுத்த பாராளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்று கணக்குப் போடுகின்றனர் என்கின்றன அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

இந்தப் பத்தியில் நாம் பிரதானமாக சொல்ல வருவது, இந்த தேர்தலுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி பரந்த கூட்டணி ஒன்றை அமைப்பதற்காக தீவிரமாக பணியாற்றிவருகின்றது பற்றியே.

ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரிலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு பெயரிலோ ஐ. தே. க. தலைமையில் அமையவுள்ள இந்த கூட்டணியில் நிமல் லான்சா தற்போது உருவாக்கிவரும் அணி மட்டுமன்றி பல்வேறு கட்சிகளும் இணையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சஜித் தரப்பும் கடைசி நேரத்தில் தம்முடனேயே இணையலாம் என்ற நம்பிக்கையிலேயே காய் நகர்த்தல்கள் இடம்பெற்றுவருகின்றன என்று தெற்கு செய்திகள் தெரிவிக்கின்ற அதேவேளை, இந்த கூட்டணியை ஒரு பொது வேலைத் திட்டத்தின்கீழ் உருவாக்கவே ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருக்கிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த நல்லாட்சி காலத்தில் சுமார் நாற்பதுக்கும் அதிகமான கட்சிகள் இயக்கங்கள் பொது வேட்பாளரான மைத்திரியின் பின்னால் அணி திரண்டபோதிலும், அவை ஒவ்வொன்றும் மைத்திரியுடன் தனித்தனியான ஒப்பந்தங்களை செய்துகொண்டன. அதாவது தத்தமது விருப்பங்கள், தேவைகள் குறித்தே அவை கவனம் செலுத்தியிருந்தன. அதனாலேயே அது தோல்வியில் முடிந்ததாக நம்பும் ஜனாதிபதி தரப்பு, இப்போது முக்கிய பிரச்னைகளில் - முக்கியமான பத்தோ பன்னிரண்டு விடயங்களில் பொது உடன்பாட் டுக்கு வரக்கூடிய கட்சிகள் இயக்கங்களுடனேயே கூட்டணி அமைக்க விரும்புவதாகவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படும் பொருளாதார சீர்திருத்தங்களை தொடர்வதா? அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவா? என்பதுபோன்ற முக்கிய விடயங்களில் ஒத்த கருத்துள்ள கட்சிகளுடன் கூட்டணி சேர்வதையே ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகின்றது என்றும் தமது கொள்கைகளோடு ஒத்துப் போகாத கட்சிகளுடன் தேர்தல் வெற்றிக்காக மட்டும் இணைந்து கொள்வது பின்னர் நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என்றும் ஐ. தே. க. நம்புகின்றது என்கின்ற அதனுடன் நெருக்கமான வட்டாரங்கள்.

இந்த பொது வேலைத்திட்டத்தில் இனப் பிரச்னைக்கான தீர்வு முயற்சியையும் சேர்க்க ஐ. தே. க. விரும்புகின்றது என்றும் முக்கியமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறு இனமுறுகல் விவகாரம் அவர்களின் பொது வேலைத்திட்டத்தில் சேர்க்கப்படுமானால், அனேகமாக பதின்மூன்றாவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்ற விடயம் இடம்பெறலாம் என்கின்றது ஒரு தகவல்.!

**- ஊர்க்குருவி.**

# இந்து சமுத்திர நாடுகளின் ஒன்றிய அமைச்சர்கள் இலங்கை வருகின்றனர்!

கொழும்பு, ஒக். 09

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்தின் (ஐஒசுயு) 23ஆவது அமைச்சர்கள்மட்ட கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அதன் உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், ஏனைய சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடுத்து வரும் நாட்களில்இலங்கை வரவுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்தின் 23ஆவது அமைச்சர்கள் மட்டக் கூட்டம் நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பிள்ளையான், வியாழேந்திரன் எமக்கு எதிராக பேசியதில்லை

## சுமணரத்ன தேரர் சொல்கிறார்

மட்டக்களப்பு, ஒக். 09

"எமது பிள்ளையான் அமைச்சர் எமக்கு ஒரு வார்த்தைகூட கூறியதில்லை. எனினும் இந்த சாணக்கியன் என்ற மனிதன் எப்போதும் பாராளுமன்றம் சென்று சிங்களவர்களை தாக்குகின்றார். மற்றுமொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கின்றார் (வியாழேந்திரன்) அவரும் ஒருபோதும் சிங்களவர்களை தாக்கியதில்லை." என்று கூறியுள்ளார் அம்பிட்டிய சுமண ரத்ன தேரர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரப் பகுதியில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், சாணக்கியன் எம். பி. சிங்களவர்களை தாக்குவதை அவர் நிறுத்தாவிட்டால், எங்கள் போராட்டத்தை நிறுத்த போவதில்லை. நாம் எந்தவொரு தமிழருக்கும் முஸ்லிம் இனத்தவருக்கும் எதிராகவும், இனவாத மதவாதத்தை பரப்பியது இல்லை. அதன் பிரதிபலனாகவே நாம் இந்த மட்டக்களப்பு நகரில் வாழ்கின்றோம். நாம் 35 ஆண்டுகள் வாழ்கின்றோம்.



எல்லோருக்கும் என்னைப்பற்றி தெரியும். எந்தவிதமான இனவாத மதவாதத்தையும் நான் முன்னெடுத்ததில்லை. தாய், பிள்ளை போன்று வாழ்கின்றோம். சாணக்கியன் என்ற மனிதன் எப்போதும் பாராளுமன்றுக்கு சென்று சிங்களவர்களை விரட்டியடிக்க கறவை மாடுகளின் உரிமை பற்றி பேசுகின்றார்.

சிங்களவர் சோறு சாப்பிடுவதை பற்றி பேசவில்லை. சாணக்கியன் பாராளுமன் றிற்கு சென்று இனவாதத்தை பரப்புகின்றார். இதனை நிறுத்த வேண்டும். இது நிறுத்தப்படும் வரை நாமும் ஓர் இனம் என்ற ரீதியில் செயல்படவேண்டும் - என்றார். (ஐ)

# கிராம அலுவலரிடம் பணம் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 09

பெண் கிராம அலுவலரிடம் இருந்து ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் உரும்பிராய் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் சந்தி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பெண் கிராம அலுவலர் அணிந்திருந்த கைப்பையை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பறித்துக் கொண்டு தப்பினர்.

இது தொடர்பில் கிராம அலுவலரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரின் கைபேசியில் இருந்த கைபேசி, ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பணம் என்பன இருந்தன என்றும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# வாளுடன் இளைஞர் காரைநகரில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 09

காரைநகரில் வாள் ஒன்றுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் ஊரி பகுதியை சேரந்த இளைஞன் வாள் ஒன்றை வைத்திருப்பதாக ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அவரின் வீடு சோதனையிடப்பட்டது.

இதன்போது, அந்த வீட்டில் இருந்து வாள் மீட்கப்பட்டது. இதையடுத்து வீட்டிலிருந்தத 28 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# 150 அடி உயரத்திலிருந்து ஆற்றில் பாய்ந்தது கார்!

## அதிர்ஷ்டவசமாக சாரதி உயிர் தப்பினார்

கொழும்பு, ஒக். 09

பதுளை பண்டாரவளை - பிரதான வீதியில் உடுவர 5 நில்போவில பிரதேசத்தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி பதுளு ஓயா வில் வீழ்ந்தது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

எல்லயிலிருந்து பசறை நோக்கிச் சென்ற கார் ஒன்றே வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி உயரத்திலிருந்து பதுளு ஓயாவில் கவிழ்ந்தது.

அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதுடன், வாகனம்



நீரில் மிதந்து கொண்டிருந்த போது, காரின் சாரதி அதிலிருந்து இறங்கிய நீந்தி உயிர் தப்பினார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
09.10.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெளியேறிய நீதிபதி எங்கே?

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றார். நீதியை காப்பாற்றும் முயற்சியில் அவருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் மற்றும் ஆபத்துகள் காரணமாகவே அவர் வெளியேறியிருக்கின்றார். நீதித்துறையின் மீதான அச்சுறுத்தலை கண்டித்தே தமிழ் கட்சிகள் தங்களால் முடிந்த எதிர்வினைகளை ஆற்றியிருக்கின்றனர். ஆனால், இந்த எதிர்வினைகளில் பெருமளவான மக்களை காணவில்லை – பெருமளவான மக்களை திரட்டக்கூடிய ஆற்றலுடன் எந்தவொரு தமிழ் தேசிய கட்சியும் இல்லையென்பதும் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. ஒவ்வொரு கட்சியும் மக்களை அணி திரட்டியிருந்தால்கூட பெருமளவான மக்கள் இவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்குகொண்டிருக்க வேண்டும்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் ஒரு கேள்வி தவிர்க்க முடியாததாகின்றது. அதாவது, குற்றச்சாட்டை முன்வைத்திருக்கும் – நீதியை காப்பாற்றும் முயற்சியில் தனது பாதுகாப்புக் கருதி நாட்டைவிட்டு வெளியேறியிருக்கும் நீதிபதி சரவணராஜா தான் எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் இதுவரையில் பொதுவெளிகளில் தோன்றி தனது குரலை பதிவு செய்யவில்லை ஏன்?

அவர் தற்போது நெருக்கடிகளற்ற பிறிதொரு சூழலில் இருக்கின்றார். அவரை முன்னிறுத்தியே தமிழ் கட்சிகள் செயல்படுகின்றன. அவரின் தமிழ்பற்றுக்காக தலைவணங்குவதாக பலரும் பேசிவருகின்றனர். ஆனால், அவரோ நீதியை காப்பாற்றும் முயற்சிக்காக ஒரு தமிழ் நீதிபதி என்பதால் தான் எதிர்கொண்ட சவால்களை – அச்சுறுத்தல்களை – அவமானங்களை சர்வதேச அரங்குகளில் ஆதாரபூர்வமாக முன்வைக்க வேண்டும் – ஆனால், அவர் அதற்கான சிறிய முயற்சியைக்கூட எடுத்ததாகத் தெரியவில்லை. அவருக்காக மற்றவர்களே பேசிக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்களாகிவிட்டன. இந்த பதினான்கு வருடங்களில் நீதி என்பதே தமிழ்த் தேசிய அரசியலின் இலக்காக முன்னிறுத்தப்பட்டது. அதற்கான இராஜதந்திர முயற்சிகளில் தாம் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவே அனைத்துத் தமிழ் கட்சிகளும் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டன. இதில் நாங்களே சரியானவர்கள் – நாங்கள் மட்டுமே சர்வதேச விசாரணையை முறையாகக் கோருகின்றோம் – மற்றவர்கள் போர் குற்றவாளிகளை காப்பாற்ற முயற்சிக்கின்றனர் என்றவாறு, கஜேந்திரகுமார் அணியினர் கூட்டமைப்பின் மற்றவர்கள் மீது கற்களை வீசினர் – ஆனால் கூட்டமைப்போ – தங்களுடைய செயல்பாடுகளின் காரணமாகவே ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விடயம் தொடர்ந்தும் பேசு பொருளாக இருக்கின்றது – என்று வாதிட்டனர். ஆனால், பதினான்கு வருடங்களை திரும்பிப் பார்த்தால், தமிழ் மக்களுக்கான நீதி விடயத்தில் எவ்வித முன்னேற்றங்களையும் காண முடியவில்லை.

இவ்வாறானதொரு சூழலில்தான், ஒரு தமிழ் நீதிபதி நீதியை காப்பாற்ற முற்பட்ட போது, அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதான குற்றச்சாட்டு அரசியலாகியிருக்கின்றது. அடிப்படையில் இது ஒரு முக்கியமான விடயம் – இலங்கையின் நீதித் துறைக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியில்லை என்பதை உரத்துப் பேசுவதற்கான ஒரு வலுவான ஆதாரம். ஆனால், சம்பந்தப்பட்ட நீதிபதியோ நாட்டைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து எதுவுமே பேசவில்லை. அவர் சர்வதேச அரங்குகளில் பேச வேண்டும். ஒருவேளை அவர் அமைதியாகவே இந்த விடயத்தை கடந்து சென்று தனது சொந்த வாழ்க்கைக்குள் முடங்கிப் போவாராயின் அவரை முன்வைத்து காண்பிக்கப்படும் எதிர்வினைகள் பெறுமதியற்றுப் போகலாம்.

# வடகீழ் பருவ மழைக்கான எதிர்வுகூறல்

**வடகீழ் பருவ மழை ஆரம்பிக்கவுள்ள நிலையில் அது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா வெளியிட்ட விவசாயிகளுக்கான பதிவு முக்கியத்துவம் கருதி பிரசுரமாகிறது.**



இந்த ஆண்டு எல்நினோ ஆண்டு என்பதனால் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் வடகீழ் பருவம் சராசரி மழையை விட(550 மி.மீ.) 14- 19 வீதம் குறைவாகவே மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எல்நினோ ஆண்டாக இருந்தாலும் இந்த ஆண்டும் வடகீழ் பருவக் காற்று காலத்திலும் நான்கு முதல் ஆறு தாழமுக்கங்கள் தோன்றும் என எதிர்பார்க்கப்படுவதாலும், ஆறு சந்தர்ப்பங்களில் செறிவான மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாலும் இவ்வாண்டும் எமக்கு மூன்று சந்தர்ப்பங்களில் ( நவம்பர் 20 முதல் டிசெம்பர் 05 வரை, டிசெம்பர் 10 முதல் 22 வரை, டிசெம்பர் 26 முதல் 2024 ஜனவரி 08 வரையான இந்த நாட்களில் - ஒரு சில நாட்கள் முந்தலாம் அல்லது பிந்தலாம்) வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புகள் உள்ளன.

இந்த ஆண்டு இரண்டாவது இடைப் பருவ காலத்தில் கிடைக்க வேண்டிய சராசரி மழையின் 38வீதம் மட்டுமே கிடைக்கும் (இக்காலப்பகுதியில் நேற்று வரை கிடைத்திருக்க வேண்டிய மழையின் அளவு 80 மி.மீ. கிடைத்திருப்பது 43 மி.மீ. )

எதிர்வரும் வியாழக்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதற்குப் பின்னர் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு பின்னரே சற்று மிதமான மழை கிடைக்கத் தொடங்கும். அது 03.11.2023 வரை தொடரக்கூடும். (நவராத்திரியின் கும்ப சரிவையொட்டி மழை கிடைக்கும் என்ற எமது உள்ளூர் அறிவின் நம்பிக்கை இம்முறையும் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.)

காலநிலை மாற்றம் காலநிலைப் பருவ காலங்களின் தொடக்க காலம் மற்றும் முடிவுறும் காலங்களில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவக்காற்று இலங்கைக்கு ஜூலை நடுப்பகுதியிலே வீசத் தொடங்கியது. வழமையாக செப்ரெம்பர் 10ஆம் திகதியோடு விலக வேண்டிய தென்மேற்கு பருவக்காற்று ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு பின்னரே படிப்படியாக பின்வாங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது (ஆகவே, கொழும்பு உட்பட்ட மேல் மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் கன மழை இவ்வாரமும் நீடிக்கும்.)

எனவே, வடகீழ் பருவக்காற்று நவம்பர் 10ஆம் திகதிக்கு பின்னரே இலங்கைக்கு (திருகோணமலையே வடகீழ் பருவக்காற்றின் முதல் வீசலை சந்திக்கும்) வீசத் தொடங்கும். வழமை போன்று அல்லாமல் இம்முறை வடகீழ் பருவக்காற்றின் காலம் குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே வடகீழ் பருவக் காற்றின் மழை நாட்கள் 21 முதல் 27 ஆகவே இருக்கும்.

இந்த ஆண்டு வட கீழ் பருவத்தில் நான்கு முதல் ஆறு தாழமுக்கங்கள் வங்காள விரிகுடாவில் தோன்றும் வாய்ப்புள்ளது. ( இம் மாத இறுதியில் அரபி கடலில் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது. வங்காள விரிகுடாவில் தோன்றும் தாழமுக்கங்களில் இரண்டு புயலாக மாறும் வாய்ப்புள்ளது.

**நாம் செய்ய வேண்டியவை**

விவசாயிகள் வியாழக்கிழமை வரையான காலப்பகுதியில் கிடைக்கும் மழையைப் பொறுத்து விதைப்புச் செயல்பாடுகளை தீர்மானிக்கலாம். ( யாழ்ப்பாண மாவட்டத்தின் பல விவசாயிகள் ஏற்கெனவே, கிடைத்த வெப்ப சலன மழையை நம்பி விதைத்துள்ளார்கள். வரும் வியாழமைக்குள் மழை கிடைக்காவிட்டால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள்.)

நீண்ட கால நெல்லினங்களை விதைக்காது குறுங்கால விதையினங்களை விதைப் பதன் மூலம் 2024 ஜனவரிக்கு பின்னான காலப் பகுதியில் நீர்ப்பாசன நீரை எதிர் பார்க்க தேவையில்லை. அத்தோடு அடுத்த ஆண்டு சிறுபோக விதைப்பையும் இது பாதிக்கும்.


இயலுமானவரை சேற்று விதைப்புக்கான பெருமழையை எதிர்பாராது புழுதி விதைப்புக்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்துதல்.

ஒக்ரோபர் 20ஆம் திகதிக்கு முன்பதாக எமது சூழலில் காணப்படும் மரங்களின் விதானங்களை குறைத்தல் / கிளைகளை வெட்டுதல் வேண்டும். இதன் மூலம் கடும் மழை மற்றும் காற்றால் அந்த மரங்களின் மூலம் ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கலாம். நீங்கள் அடிக்கடி நடமாடும் பகுதிகளின் பள்ளமான பகுதிகளை அடையாளப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக மழைக் காலம் ஒன்றை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். அதிகளவு இடிமின்னல் நிகழ்வுகள் இடம்பெறும் வாய்ப்புள்ளத னால் அவற்றின் பாதுகாப்பு முறைகளை அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

எமது வீடு, தொழிலிடம், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற சேவை மையங்கள், எமது போக்குவரத்து பாதைகளில் உள்ள பட்ட மரங்கள், சேதமடைந்த மின்கம்பங்கள் மற்றும் தொலைத்தொடர்பு கம்பங்கள் போன்ற கன மழையால் அல்லது வேகமான காற்று வீசலால் ஆபத்தை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் உரிய தரப்புக்களுக்கு அறிவித்து அவற்றை அகற்றுதல்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடிவரும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். மேலதிகாரிகள் ஒத்துழைப்பார்கள்.மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும்.பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மேலதிகாரிகளிடம் விவாதம் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். மதிப்புக் கூடும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதுவேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

# காங்கிரஸ் - அ. தி. மு. க. இணைந்து தேர்தலை சந்திக்க இரகசிய பேச்சு!

*சென்னை, ஒக். 09*

*தமிழக அரசியலில் விரைவில் மிகப் பெரிய திருப்பம் வரவுள்ளது. அ.தி.மு.க.,வின் முக்கிய பிரமுகர் ஒருவர், காங்கிரஸ் மேலிடத்தில் இரகசிய பேச்சு நடத்தி வருகிறார் என்று தமிழகத்தின் பிரபல நாளிதழான தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது.*

*அந்த செய்தியில், 'ஐந்து மாநில சட்டசபை தேர்தல்கள் முடியும் வரை காத்திருங்கள் நல்ல முடிவு வரும். ராகுல்தி.மு.க., கூட்டணியில் உறுதியாக இருந்தாலும், அவர் மனதை நாங்கள் மெதுவாக மாற்றி வருகிறோம்...' என, காங்கிரஸ் கட்சியின் மூத்த அரசியல்வாதி ஒருவர் அ.தி.மு.க., பிரமுகரிடம் தெரிவித்துள்ளாராம்.*

*இதற்கிடையே, இன்னொரு வரும் அ.தி.மு.க., - காங்., கூட்டணி வரவேண்டும் என, கடுமையாக வேலை செய்துகொண்டிருக்கிறார் அவர் காங்கிரசின் தேர்தல் வியூகத்தை தயாரித்தவர். இவர்தான் காங்கிரஸின் கர்நாடக வெற்றிக்கு காரணம். இவர், ஏற்கனவே அ.தி.மு.க., வின் தேர்தல் வியூகத்தை வகுத்தவர். எனவே அ.தி.மு.கவுக்கு நன்கு அறிமுகமானவர் இவர், தற்போது ராகுலுக்கு படுநெருக்கம். தமிழக அரசியல் களத்தை நன்கு அறிந்தவர்.*

*இவர், சமீபத்தில் பழனிசாமிக்கு நெருக்கமான, அ.தி.மு.க., தலைவரை சந்தித்துள்ளார். தவிர, தேசிய தலைவர் மல்லிகார்ஜூன கார்கேவுக்கும், ராகுலுக்கும் ஓர் அறிக்கை அளித்துள்ளாராம். 'காங்கிரஸூம், அ.தி.மு.க.,வும் தேர்தலை பல முறை இணைந்து சந்தித்துள்ளன் இது இயற்கையான கூட்டணி. மேலும், அ.தி.மு.க.,வுடன் இணைந்தால் அதிக தொகுதிகளைப் பெறலாம். தி.மு.க., மீது மக்கள் கோபத்தில் உள்ளனர்...' என, தன் அறிக்கையில் கூறியிருக்கிறாராம் என்று கூறப்பட்டுள்ளது.*

*(ஐ)*

# இலங்கை கடற்கொள்ளையர்களால் மீனவர்களின் பொருட்கள் பறிப்பு!

## நாகபட்டினம் பொலிஸில் முறைப்பாடு அரசியல் தலைவர்கள் கண்டனம்!

*நாகபட்டினம், ஒக். 09*

*கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாகை மீனவர்கள் 4 பேரைத் தாக்கிய இலங்கை கடல் கொள்ளையர்கள் 4 இலட்சம் (இந்திய) ரூபாய் மதிப்பிலான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*நாகபட்டினத்தில் இருந்து மீன் பிடிக்க சென்றவர்களை மறித்தே இந்தக் கொள்ளை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.*

*பின்னர் அவர்களில் இருவர் வெள்ளப்பள்ளம் மீனவர்களின் படகில் ஏறி, மீனவர்களை ரப்பர் தடியால் சரமாரியாகத் தாக்கியதுடன், கத்தியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்தனர். தொடர்ந்து, படகில் இருந்த 200 கிலோ எடை கொண்ட புதிய வலை, ஜி. பி. எஸ். கருவி, வோக்கிரோக்கி, மீன்கள், 3 கைபேசிகள் உட்பட ரூ.4 லட்சம் மதிப்பிலான பொருட்களையும், மீனவர் மணியன் அணிந்திருந்த வெள்ளி அரைஞாண் கயிற்றையும் பறித்துக்கொண்டு, அங்கிருந்து தப்பிச் சென்றனர்.*

*இதில் பலத்த காயமடைந்த மீனவர்கள் அங்கிருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் அதிகாலை வெள்ளப்பள்ளம் கடற்கரைக்கு வந்துசேர்ந்தனர். நாகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மீனவர்களுக்கு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.*

*தகவலறிந்த நாகை ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ், மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கவுதமன், நாகை நகராட்சித் தலைவர் ரா.மாரிமுத்து ஆகியோர் மருத்துவமனைக்கு சென்று, மீனவர்களை சந்தித்து, ஆறுதல் கூறினர்.*

*ஏற்கெனவே, கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற செருதூர் மீனவர்கள் 4 பேர் மீது செப்.23ஆம் திகதியும், 5 பேர் மீது செப்.25-ம் திகதியும் கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி, பொருட்களைப் பறித்துச் சென்ற நிலையில், மீண்டும் தற்போது கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது தமிழக மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே, அச்சமின்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபட, மத்திய, மாநில அரசுகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*கடல் கொள்ளையர்களின் அத்துமீறல் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*(ஐ)*

# ஜெயலலிதாவின் சொத்து விவரம் அறிக்கை சமர்ப்பிக்க மன்று உத்தரவு

*பெங்களூர், ஒக். 09*

*தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது 1996ஆம் ஆண்டு சொத்துக் குவிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஜெயலலிதாவின் வீடு, நிறுவனங்களில் இருந்து தங்கம், வெள்ளி, வைரம், புடவை, கைக்கடிகாரம், தொலைக்ககாட்சி, வாகனம் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.*

*இந்த பொருட்களை ஏலம் விடக்கோரி பெங்களூரை சேர்ந்த சமூக ஆர்வலர் நரசிம்மமூர்த்தி பெங்களூர் மாநகர நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் ஜெயலலிதாவின் சொத்து விவரங்கள் தொடர்பான அறிக்கையை தமிழக லஞ்ச ஒழிப்பு பொலிஸார் அளித்தனர்.*

*இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்த போது லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் 40 நாட்கள் அவகாசம் கோரப்பட்டது.*

*இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி மோகன், "இதுதான் இறுதி அவகாசம். 40 நாட்களில் ஜெயலலிதாவின் சொத்துகள் தொடர்பான விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்" என கெடு விதித்து உத்தரவிட்டார். மேலும் வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணையை நவம்பர் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.* *(ஐ)*

# 21 ஆயிரம் தொன் யூரியா விநியோகம் இன்று ஆரம்பம்!

## விவசாய அமைச்சர் மகிந்த

**கொழும்பு, ஒக். 09**
**21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அரசாங்க உர நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.**

இதையடுத்து, இலங்கை உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் இணைந்து 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை இன்று திங்கட்கிழமை முதல் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த உரத்தை விவசாய சேவை நிலையங்களில் கொள்வனவு செய்ய முடியும் எனவும், 50 கிலோ யூரியா உரம் மூட்டை ஒன்றை 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக கொமர்ஷல் உர நிறுவனம் மற்றும் சிலோன் உர நிறுவனத்தின் தலைவர் ஜகத் பெரேரா தெரிவித்தார்.

இந்த பருவத்தில் தட்டுப்பாடு இன்றி உரிய நேரத்தில் உரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் தனியார் துறையும் இணைந்து ஏற்பாடுகளை செய்துள்ளன என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)



# எனது புகைப்படங்களை இனிப் பயன்படுத்தாதீர்!

## ஜனாதிபதி ரணில் அறிவுரை

மட்டக்களப்பு, ஒக். 09
இனிமேல் தனது படங்கள், பதாதைகள், மற்றும் சுவரொட்டிகளில் காட்சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

சுவரொட்டிகளில் தமது புகைப்படத்தை பொறிப்பதை அரசியல் தலைவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே அரசியல்வாதிகள், பதாதைகள் மற்றும் அரசியல் கோஷங்களில் இருந்து விலகி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கூட்டாக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் இதன்போது அறிவுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் செங்கலடியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். (ஐ)








# ஆசிரிய கலாசாலை நூற்றாண்டு நிறைவு நாளை நடைபவனி, புதன் நிறைவுவிழா

## - கல்வி அமைச்சர் சுசில் பங்கேற்கிறார் -

யாழ்ப்பாணம், ஒக். 09
கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி நல்லூர் கோவில் பின்புறத்தில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை வரை நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபவனி நடைபெறவுள்ளது. மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நிறைவுவிழா நடைபெறவுள்ளது.

இதன்போது, கல்விஅமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் முன்னிலையில் கலாசாலையின் நூற்றாண்டு சஞ்சிகையான 'கலைமலர்' வெளியீடு, அஞ்சல் திணைக்களத்தின் இருபத்தைந்து ரூபாய் முத்திரை வெளியீடு முதல்நாள் அஞ்சல் உறை வெளியீடு, முன்னாள் அதிபர்மார் கௌரவிப்பு என்பன நடைபெறவுள்ளன என்று கலாசாலை அதிபர் ச.லலீசன் தெரிவித்துள்ளார்.

# பெரியவிளான் றோ.க.த.பாடசாலை திறன் வகுப்பறை திறந்து வைப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 09
பெரியவிளான் றோ. க. த. க. பாடசாலையில் திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (மற்றும் இரட்ணம் பவுண்டேசன் அமைப்புளால் முதலாம் கட்டத்தில் 12 பாடசாலைகளிலும் இரண்டாம் கட்டத்தில் 09 பாடசாலைகளிலும் திறன் பலகையுடனான வகுப்பறைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில், இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட 9 பாடசாலைகளில் ஒன்றான பெரியவிளான் றோ. க. த. பாடசாலையில் திறன்வகுப்பறை திறந்து வைக்கும் அண்மையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் திறன்பலகை தொடர்பாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களால், மாணவர்களுடனான பங்குபற்றுதலுடன் வகுப்பறைச் செயல்பாடுகள் மிகவினைத்திறனான முறையில் நிகழ்த்தி காட்டப்பட்டிருந்தது. (ஐ-02)

# கட்டைவேலி பொதுநூலகத்தில் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது

வடமராட்சி, ஒக். 09
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வடமராட்சி பிரதேசத்தின் கரவெட்டி - கட்டைவேலி பொதுநூலகத்தால் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்த நிகழ்வில் கட்டைவேலி பொதுநூலகத்தில் பிரதேசசபை செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழித் துறை தலைவர் கலாநிதி கிட்டிணபிள்ளை சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும் 'எங்கட புத்தகங்கள்' நிறுவன இயக்குனர் குலசிங்கம் வசீகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டிருந்தார்கள்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசகர்களுக்கான பல்வேறு நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் கடந்த 3 ஆம் திகதி கட்டைவேலி பொது நூலகத்தினரால் வாசகர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# பாதைப் பிரச்னை காரணமாக 3 மோ. சைக்கிள்கள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஒக். 09
அயல்வீட்டார்களுக்கு இடையில் நீண்ட காலமாக இருந்து வந்த பாதை முரண்பாட்டால் மூன்று மோட்டார் சைக்கிள்கள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.



இந்தச் சம்பவம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னாலைக் கட்டுவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அயலவர்கள் மத்தியில் பாதை பிரச்னை ஒன்று நீண்டகாலமாக நிலவியது. இந்த நிலையில் ஒரு அயலவர் வெளிநாட்டிலிருந்து சில மாதங்கள் முன்பாக வந்துள்ளார். இந்த நபர் வன்முறை கும்பல் ஒன்றை பயன்படுத்தி அயலவரின் இரு மோட்டார் சைக்கிள்களை தீயிட்டு எரியூட்டியுள்ளார்.

வந்த வன்முறை கும்பலை அந்த வீட்டார் துரத்திய போது ஒரு மோட்டார் சைக்கிளை கைப்பற்றி அதற்கு தீ வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்:

# எந்த சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி எங்களுடன் உரையாடவில்லை!

## கத்தோலிக்க ஆயர் பேரவை

கொழும்பு, ஒக். 09

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி எந்த வொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்க ஆயர் பேரவையை சந்திக்கவில்லை. என்னுடன், தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்ற சந்திப்பின் போது விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கிடைக்கப் பெற்றது என கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் ஹெரால்ட் அன்ரனி ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் தென்னிலங்கை பத்திரிகைக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அதில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக சுயாதீன மானதும், வெளிப்படை தன்மையானதுமான பக்கசார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் அவ்வாறான விசாரணைகள், சர்வதேச சுயாதீன விசாரணைக்குழுக்களின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற வேண்டும்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை சகல தேசிய பிரச்னை களைப் போன்றே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் நியமிக்கப்பட்ட இரு ஆணைக்குழுக்கள் மற்றும் பாராளுமன்ற விசேட குழு ஆகியவற்றால் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகள் இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் சர்வதேசத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிலைப்பாடாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்க ஆயர் பேரவையின் முழுமையான இனக்கப்பாட்டுடன் ஏகமனதாகவே அறிவிப்புக்கள் வெளியிடப்படும். அத்தோடு இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்க ஆயர் பேரவையை சந்திக்கவில்லை.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் என்னை சந்தித்தார். அந்த சந்திப்பின் போது அப்போது நாட்டில் காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பிலேயே நாம் பிரதானமாகக் கலந்துரையாடினோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை மதிப்பீடு செய்வதற்காக எம்மிடம் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அந்த முழுமையான அறிக்கையிலுள்ள 6 தொகுதிகள் எமக்கு வழங்கப்பட்டன. அந்த அறிக்கை எமது சட்டத்தரணிகளால் தற்போது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது - என்றும் கூறினார்.

# அண்ணாமலை பல்கலை. விழாவில் பேரா. பாலாஜியின் நூல் வெளியீடு!



சென்னை, ஒக். 09

உலக புகழ்பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் 89ஆவது நிறுவனர் தின விழா கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு துணை வேந்தர் கலாநிதி கதிரேசன் தலைமை வகித்தார். இவ்விழாவுக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவரான சென்னையைச் சார்ந்த பிரபல முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர் பேராசிரியர் எஸ். எம். பாலாஜி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு நிறுவுநர் தின உரையை வழங்கினார்.

பேராசிரியர் பாலாஜி தனது உரையில் நிறுவுநர் மற்றும் தற்போதைய துணைவேந்தரின் திறமையான தலைமையின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நினைவுகூர்ந்தார். இவ்விழாவில் பேராசிரியர் எஸ். எம். பாலாஜி அவர்களால் எழுதப்பட்ட "Textbook of Maxillofacial Surgery" புத்தகத்தின் 4ஆவது பதிப்பு துணை வேந்தரால் வெளியிடப்பட்டது.

இதன் முந்தைய பிரதிகள் இந்தியா மற்றும் உலகின் பல நாடுகளிலும் பல் மருத்துவ மாணவர்களால் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், மருத்துவ உலகில் முக்கியத்துவம் வாய்ந்த நூலாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

# காலி, மாத்தறை பாடசாலைகள் நாளை வரை மூடப்பட்டிருக்கும்!

கொழும்பு, ஒக். 09

காலி, மாத்தறை மாவட்டங்களின் அனைத்து பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தென் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, காலி மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்றும், நாளையும் மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாத்தறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் தொடர்ந்து மூடப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக மாத்தறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் கடந்த 5 ஆம் திகதி முதல் விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த நிலையில், மாத்தறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் நாளை வரை மூடப்பட்டிருக்குமென மாத்தறை மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நீதித்துறையை பாதுகாக்குமாறு கொழும்பில் இன்று போராட்டம்!

கொழும்பு, ஒக். 09

நீதிபதிகளினதும் நீதித்துறையினதும் கௌரவத்தையும், சுயாதீனத்தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் இன்று திங்கட்கிழமை கொழும்பு உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கவுள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா அண்மையில் பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறினார். அவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் - அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கில் தொடர் போராட்டம் நடக்கிறது.

இந்த நிலையிலேயே நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு, ஹல்ஃப்ஸ்டொப்பில் அமைந்துள்ள உயர்நீதிமன்றம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மூன்று திணைக்களங்களுக்கு 2024 முதல் வருமான இலக்கு!

கொழும்பு, ஒக். 09

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றை வினைத்திறனாக்கும் வகையில் 2024ஆம் ஆண்டு முதல் இவற்றுக்கு வருமானத்தை ஈட்டுவதற்கான இலக்குகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த திணைக்களங்கள் வருடத்துக்கு ஈட்ட வேண்டிய வருமானம் உள்ளிட்ட இலக்குகள் வழங்கப்படவுள்ளன.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக மேற்குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் முறையாக செயல்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது. இதற்கமைய அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதில் இந்த பலவீனமாக செயல்பட்டு வருகின்றமையை அரசாங்கம் அவதானித்துள்ளது.

இந்தத் திணைக்களங்களில் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மிகவும் பலவீனமானதாகக் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய குறித்த திணைக்களங்கள் 2024 இலிருந்து அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலக்குக்கு அமைய செயல்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 700 கோடி ரூபாயும் இலங்கை சுங்கத்திடமிருந்து ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 700 கோடி ரூபாயும் மதுவரித் திணைக்களத்திலிருந்து 2ஆயிரத்து 170 கோடி ரூபாயும் என்ற அடிப்படையில் மூன்று இலட்சத்து 10 ஆயிரத்து 100 கோடி வருமான இலக்கை அரசு எதிர்பார்க்கிறது.

ஆனால், முதல் அரையாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுமார் 95 ஆயிரத்து 600 கோடி ரூபாயையும் இலங்கை சுங்கம் சுமார் 57ஆயிரத்து 800 கோடி கோடி ரூபாயையும் மதுவரித் திணைக்களம் சுமார் 10 ஆயிரத்து 90 கோடி ரூபாயையும் மொத்தமாக சுமார் ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 300 கோடி ரூபாயையே வருமானமாகப் பெற்றுள்ளன.

அதற்கமைய இந்த வருட இறுதிக்குள் சுமார் 2 இலட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாயை மாத்திரமே உரிய இலக்கில் இருந்து பெற முடியும் என அரசாங்கம் நம்புகிறது. இதனால் 63 ஆயிரத்து 700 கோடி ரூபாயையும் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறான நிலைமை அடுத்த வருடத்திலும் ஏற்படாமல் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கணவனால் மனைவி குத்திக் கொலை

கொழும்பு, ஒக். 09

ராஜாங்கனை பிரதேசத்தில் வசித்து வந்த 53 வயதுடைய பெண் ஒருவரை, பிரிந்த கணவன் எனக் கூறப்படும் நபர் கத்தியால் குத்திக் கொலை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரேணுகா தீபானி என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் மார்புப் பகுதியில் இரண்டு கத்திக்குத்து காயங்களும் கை பகுதியில் காயமும் காணப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அந்தப் பெண் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# 9 இலட்சத்து 12 ஆயிரம் கோடி ரூபாயை ராஜபக்ஷ குடும்பம் கொள்ளையிட்டது!

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக். 09**

**“ராஜபக்ஷ குடும்பத்தினர் 9 இலட்சத்து 12 ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை கொள்ளையிட்டனர்”, என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் நளின் ஹேவகே குற்றம் சுமத்தியுள்ளார்.**



தேசிய மக்கள் சக்தயின் பெந்தர - எல்பிட்டிய தொகுதியின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கணக்காய்வாளரின் அறிக்கைக்கு அமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது. கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை முதலீட்டு செலவாக மாத்திரம் 9 இலட்சத்து 21 ஆயிரம் கோடி ரூபாயை செலவிட்டுள்ளனர்.

எனினும், கொள்வனவு மற்றும் பௌதிக வளங்களாக 2 இலட்சத்து 93 ஆயிரம் கோடி ரூபாய் மாத்திரமே உள்ளது எனவும் ஹேவகே கூறியுள்ளார். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நான் தயார்

## தம்மிக பெரேரா எம். பி.

கொழும்பு, ஒக். 09

ஜனாதிபதி தேர்தலில் தாம் வேட்பாளராக போட்டியிட தயார் என பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விருப்பம். எவ்வாறாயினும், மொத்த வாக்குகளில் குறைந்தது 51 வீதமான வாக்குகளை பெறுவது உறுதியானால் மாத்திரமே நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன்.

நான் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம். பி. எனவே, தம்முடைய வேட்புமனுவை பெரும்பான்மை கட்சிகள் ஏற்றுக்கொண்டால் ஜனாதி பதித் தேர்தல் பிரசாரத்துக்கு கணிசமான அளவு வலுசேர்க்கும்” எனவும் தெரிவித்தார். (ஐ)

# நீதிமன்ற பாதுகாப்பிலிருந்த 120 கிலோ கஞ்சா மாயமானது!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஒக். 09

கிளிநொச்சி நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு பாதுகாப் பறையில் வைக்கப்பட்ட 120 கிலோ கஞ்சா பொதி மயமாகியுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கஞ்சா இவ்வாறு மாயமானமை கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து, புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில், கொழும்பிலிருந்து விரைந்த விசேட குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதன் அடிப்படையில் ஊழியர்கள் மூவருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களஞ்சியப் பகுதியிலிருந்து மதுபானங்கள் உள்ளிட்ட அழிக்கப்பட வேண்டிய பொருட்களும் காணாமல் போயுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

களஞ்சிய பொறுப்பில் இருந்த இருவர் கனடா செல்ல முற்பட்ட நிலையில் அவர்களிற்கான பயண தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், துப்புரவு பணியிலிருந்த பெண் ஒருவர் மத்திய கிழக்கு நாட்டுக்கு செல்ல முற்பட்ட நிலையில் அவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிதாக பொறுப்பெடுத்த சான்றுப் பொருள் களஞ்சியத்திற்கு பொறுப்பான ஊழியர்கள் பூட்டு உடைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பதிவாளருக்கு வழங்கிய தகவலிற்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே சான்றுப் பொருட்கள் மாயமான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் பொது போக்குவரத்தில் பயணிப்பது உயிருக்கு ஆபத்தானது!

## ரஷ்ய சுற்றுலா பயணி பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, ஒக். 09

“இலங்கையில் பொது போக்குவரத்தில் பயணிப்பது உயிருக்கு ஆபத்து”, என கூறி ரஷ்ய சுற்றுலா பயணி ஒருவர் பொலிஸாரிடம் அழுதவாறு முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

ரஷ்யாவில் இருந்து விடுமுறையை கழிக்க இலங்கைக்கு வருகை தந்த ரஷ்ய பெண் ஒருவர் கொழும்பில் இருந்து பொலநறுவை நோக்கி பயணிக்கும் பேருந்து ஒன்றில் பயணம் செய்துள்ளார்.

அவர் பயணித்த குறித்த பேருந்தானது மணிக்கு 100கி.மீ. வேகத்தில் பயணித்தது. இதனால் அச்சமடைந்த குறித்த ரஷ்ய பெண் சாரதியிடம் சென்று வேகத்தை குறைக்குமாறு கேட்டார் என்றும், அதனை சிறிதும் பொருட்படுத்தாத சாரதி வீதியின் வளைவுகளில் மிகவும் வேகமாக பேருந்தை செலுத்தியுள்ளதுடன் ஏனைய வாகனங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் முந்தியும் சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த குறித்த ரஷ்ய பெண்,

“இது எங்கள் உயிருக்கு மிகவும் ஆபத்தானது, நாங்கள் சாக விரும்பவில்லை. நாங்கள் சுற்றுலாப் பயணிகள், நாங்கள் இலங்கையைப் பார்க்க விரும்புகிறோம், நான் மிகவும் பயந்து, பேருந்தில் அழுதேன்.

இலங்கையில் உள்ள பேருந்தின் சாரதிகள் மக்களின் உயிரைப் பணயம் வைத்து வாகனத்தை செலுத்துகிறார்கள். நகரப் பகுதிகளிலும் நகரங்களுக்கு வெளியேயும் பேருந்துகள் ஓட்டுவதற்கு வேக வரம்புகளை விதிக்கும் விதிகளைப் பயன்படுத்தவும், மணிக்கு 60 கி.மீ வேகத்துக்கு மிகாமல் இருக்க கட்டுப்பாடுகளை விதிக்குமாறு நான் அதிகாரத்தில் உள்ளவர்களிடம் கோரிக்கை விடுகின்றேன்.

இலங்கையில் பேருந்துகளில் பயணம் செய்வது மிகவும் ஆபத்தானது, நான் பேருந்துகளில் ஏறும் போதெல்லாம், பயணத்தின் இறுதி வரை என்னைப் பாதுகாப்பாகவும் உயிருடனும் வைத்திருக்க கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன்’ என குறித்த பெண் தெரிவித்துள்ளார். (ஐ)

# பழைய வாகனங்களை இறக்குமதி செய்ய முடிவு

கொழும்பு, ஒக். 09

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாட்டை அரசாங்கம் தளர்த்தியுள்ள போதிலும் இறக்குமதிக்கு வணிக வங்கிகள் ஊடாக கடன் கடிதங்களை திறக்க முடியவில்லை என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வணிக வாகனங்கள், நிர்மாணத்துறை சம்பந்தமான வாகனங்கள், இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

எனினும், அதற்கான கடன் கடிதங்களை வெளியிட வேண்டாம் என இறக்குமதி கட்டுப்பாட்டாளர் உத்தரவிட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

ஆரம்பத்தில் ஐந்தாண்டுகள் பழமையான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. எனினும், தற்போது 10 ஆண்டுகள் பழமையான வாகனங்களை இறக்குமதி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது எனவும் அந்த சங்கத்தின் தலைவர் சம்பத் மொரஞ்சிகே தெரிவித்துள்ளார்.

இந்த பழமையான வாகனங்களின் விலை குறைவு என்றாலும் அவை 10 இலட்சம் கிலோ மீற்றருக்கும் மேல் ஓடியுள்ளதால், பராமரிப்பு செலவு அதிகமாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 09

நாட்டின் 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, காலி, மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட, மத்துகமை மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் காலி மாவட்டத்தின் யக்கமுல்லை, எல்பிட்டி, நாகொடை, இமதுவ உள்ளிட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கும், மாத்தறை மாவட்டத்தின் ஹக்மன, பிட்டபெத்தர மற்றும் அக்குரஸ்ஸ ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அரச சேவையில் புதிய ஆட்சேர்ப்பு இடம்பெறாது

கொழும்பு, ஒக். 09

எதிர்காலத்தில் அரச சேவையின் மிகவும் அத்தியாவசியமான பகுதிகளை தவிர அரச துறையில் எந்தவொரு வேலைக்கும் புதிய ஆட்சேர்ப்பு இடம்பெறாது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அரச சேவையானது அரசாங்கத்துக்கு தாங்க முடியாத பிரச்னையாக மாறியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

“15 இலட்சம் அரசு ஊழியர்கள் உள்ளனர். நாட்டின் மக்கள் தொகை 21 மில்லியன். மக்கள் தொகையில் சராசரியாக 12 பேருக்கு ஒரு அரசு ஊழியர் உள்ளனர். இது உலகின் மிக உயர்ந்த அரசு ஊழியர்களின் விகிதங்களில் ஒன்றாகும். எனவே இது பெரிய சுமை இனி அதை செய்ய முடியாது - என்றார். (ஐ)

# பொலிஸ் மா அதிபரின் பதவி நீடிப்பு இன்றுடன் முடிகின்றது

கொழும்பு, ஒக். 09

பொலிஸ் மா அதிபர் சீ. டி. விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்டுள்ள சேவை நீடிப்பு காலம் இன்று திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது.

விக்ரமரதன் உத்தியோபூர்வமாக பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், அரசாங்கம் அவரது பணிக்காலத்தை இரண்டு முறை நீடித்தது. இரண்டாவது முறை வழங்கப்பட்ட பணி நீடிப்பு காலம் இன்றுடன் முடிவடைய உள்ள நிலையில், அவருக்கு மீண்டும் பணி நீடிப்பு வழங்கப்படுமா அல்லது புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படுவாரா என்பது நேற்றுவரை அறிவிக்கப்படவில்லை.

அத்துடன், புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது சம்பந்தமான பரிந்துரைகள் இதுவரை அரசமைப்பு பேரவைக்கு கிடைக்கவில்லை என தெரியவருகிறது.

இந்த நிலைமையில், விக்ரமரத்னவுக்கு மீண்டும் பணி நீடிப்பு வழங்கப்படலாம் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், பொலிஸ் மா அதிபர் பதவியை பெற பல சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

(ஐ)

# இன, மத பிரச்னைகளுக்கு தீர்வுகாண விரைவில் பேச்சுகளை நடத்துவேன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

மட்டக்களப்பு, ஒக். 09

இன மற்றும் மதப்பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல், ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்லமுடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளை காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுகள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிதுள்ளார்.

மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் நடந்தது. இதில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டாவறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்,




வேறுபாடுகளை முன் நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவை சந்திக்க நேரிட்டது. அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளன. தேசிய கீதத்தில் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று கூறப்படுவதால் அதனை சிங்களத்தில் இசைத்தாலும் தமிழில் இசைத்தாலும் பிரச்னைகள் இல்லை. அனைவரும் ஒன்றுபட்டு ஒரே தேசமாக முன்னோக்கி செல்ல வேண்டியது அவசியம்.

நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்ததால் கடந்த வருடத்தில் நாட்டு மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டது. அனைத்து வேறுபாடுகளையும் களைந்து நாட்டுக்காக அனைவரும் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டியது அவசியம் உள்நாட்டு பிரச்னைகளை நாட்டுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். அதற்காக சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை - என்றும் கூறினார். (ஐ)



# பொது நூலக ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வுகள்

மட்டக்களப்பு, ஒக். 09

மட்டக்களப்பு மாநகர சபையின் பொது நூலகத்தின் ஒழுங்கமைப்பில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் இருதயபுரம் கிழக்கு பாலர் பாடசாலை சிறார்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் பிரதம நூலகர் செல்வி த. சிவராணி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறுவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.

அத்துடன், சிறுவர்களை மகிழ்விக்கும் வகையில் கதை கூறல் நிகழ்வும் வண்ணத்துப் பூச்சி சிறுவர் பூங்காவின் பணியாளர் கே. நாகுலேஷ்வரனால் நடத்தப்பட்டதுடன் சிறுவர்களுக்கான போட்டி நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

இதன்போது, போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன். சிறுவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை வங்கியினரால் நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கலாசார திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் த. மலர்செல்வன், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ரவிச்சந்திரன், இருதயபுரம் கிழக்கு பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள், பொது நூலகத்தின் உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# போக்குவரத்து திணைக்களம் மட்டக்களப்பில் நடமாடும் சேவை!

## - எதிர்வரும் 21ஆம் திகதி-

ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF TRANSPORT AND HIGHWAYS

மட்டக்களப்பு, ஒக். 09

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் விசேட நடமாடும் சேவை எதிர்வரும் 21ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த விசேட நடமாடும் சேவையில் மோட்டார் வாகன உரிமையாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும்விதத்தில் பல நன்மைகள் வழங்கப்படவுள்ளன.

விசேடமாக அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு உரிமை மாற்றம் செய்து கொடுக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தவிர, உரிமை மாற்றத்துக்காக விண்ணப்பித்து இதுவரை தீர்க்கப்படாத பிரச்னைகளுக்க தீர்வு காணல், பதிவுச் சான்றிதழ்களில் திருத்தம் மேற்கொள்ளல், வாகனங்களை பரிசீலித்து நிறைச் சான்றிதழ் மற்றும் அடையாளச் சான்றிதழ் வழங்குதல். சகல வாகனங்களுக்கான உரிமை மாற்றல் விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் எழுத, வாசிக்க தெரியாத தேர்ச்சி குறைந்த நபர்களுக்காக வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு விசேட பரீட்சை நடத்துதல், நீண்டகாலமாக வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாத, ஆவணங்களில் குறைபாடுகளுடன்கூடிய வாகனங்களுக்காக மீண்டும் வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்வதற்கு சிபாரிசு கடிதங்கள் வழங்குதல்,

சிலிண்டர் கொள்ளளவு 50ற்கும் குறைந்த மோட்டார் சைக்கிள்களை (மோபேட்) பதிவு செய்தல், சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல். விசேட தேவையுடைய நபர்களுக்காக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குத் தேவையான மருத்துவ தொழில்நுட்ப குழுவின் சிபாரிசுகளை வழங்குதல், மோட்டார் சைக்கிள்களின் தெளிவற்ற செஸி மற்றும் எஞ்சின் இலக்கங்களை தேசிய ரீதியாக அச்சிடல் போன்ற சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இந்தநடமாடும் சேவையில் பயன்பெறவிரும்பும் பொதுமக்கள் தமது பிரிவு கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலகத்தினைத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளவும், தேவையான ஆவணங்களை தயார்படுத்திக் கொள்ளவும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காணி உறுதியற்ற 350 பேருக்கு உறுதிகள் நேற்று வழங்கப்பட்டன

மட்டக்களப்பு, ஒக். 09

சமூக சேவைகள் திணைக்களத்தின் நடமாடும் சேவையும் காணி உறுதியற்றவர்களுக்கான காணி உறுதி வழங்கும் நிகழ்வும் மட்டக்களப்பு சந்திவெளியில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டலின் கீழ் கிழக்கு மாகாண சுகாதார, சமூகசேவைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

சமூக சேவைகள் திணைக்களம், ஆயுர்வேத திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம், பொலிஸ் திணைக்களங்கள் இணைந்து இந்த நடமாடும் சேவையின் ஊடாக சேவைகளை வழங்கிவருகின்றது.



இதன்கீழ் கிரான் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவையானது சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கிரான் பிரதேச செயலாளர் ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் கே. இளங்குமுதன், மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் அருள்மொழி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன. அத்துடன், சுகாதார பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன.

அத்துடன் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் காணிகளுக்கு உறுதியற்ற 350 பேருக்கான காணி உறுதிகளும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன. (ஐ)

# ஒலுவிலில் மின்னல் தாக்கி ஒருவர் பலி; மூவர் பாதிப்பு

அக்கரைப்பற்று, ஒக். 09

வெளிச்ச வீட்டுக்கு அண்மையாக கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தோரை மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். மூன்று பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இந்த சம்பம் இடம்பெற்றது. இதில், ஒலுவில் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை சுபைதீன் நிஜாமுதீன் மரணம் அடைந்தார்.

இதேநேரம், ஒலுவில் ஏழாம் பிரிவைச் சேர்ந்த இல்முடீன் (32) ஒலுவில் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த எஸ். எம் அஹமட் (50) ஒலுவில் நான்காம் பிரிவைச் சேர்ந்த கே.அஸ்மின் (36) ஆகியோர் பாதிக்கப்பட்ட நிலையில் அக்கரைபப்பற்று ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# இஸ்ரேல் – பலஸ்தீன போர்: மேலும் வலுவடைகின்றது!

**316 பலஸ்தீனர்கள் பலி**
**300 இஸ்ரேலியர்கள் பலி!**
**400 ஹமாஸ் போராளிகள் மரணம்!**

## காசாவில் வான் வழி தாக்குதல் உச்சம்
## லெபனானும் இஸ்ரேல்மீது தாக்குதல்!





**காசா, ஒக். 09**

**பலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் தனது வான் வழிதாக்குதலை அதிகரித்துள்ளது. இதனிடையே காசா பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் போராளிகளும் தமது தாக்குதலை அதிகரித்துள்ளனர். இதனிடையே, லெபனாலிருந்தும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது.**

இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 313 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று காசா நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

தங்களின் தாக்குதலில் 400இற்கும் மேற்பட்ட ஹமாஸ் அமைப்பினர் கொல்லப்பட்டனர் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதனிடையே, ஹமாஸ் அமைப்பின் தாக்குதலில் 300இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். பல பத்து பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன. எனினும், இந்தத் தகவலை இஸ்ரேல் உறுதி செய்யவில்லை.

முன்னதாக இஸ்ரேலுக்குள் ஊடுருவிய ஹமாஸ் போராளிகள் பல இடங்களில் தாக்குதல் தொடுத்ததுடன் பலரை பணயக் கைதிகளாக பிடித்தனர். ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதலுக்கு பதில் தாக்குதலை இஸ்ரேல் தொடுத்ததுடன், காசா மீது படையெடுப்புக்கும் தயாராகி வருகின்றது.

இதனிடையே, மேற்கு கரை பகுதியில் 8 இடங்களில் இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே தாக்குதல் நடந்து வருகின்றன. நேற்று மதியம் வரை இந்தத் தாக்குதல் தொடர்ந்திருந்தது.

இதனிடையே, ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள காசா மீது இஸ்ரேல் ஏவுகணை, மற்றும் விமான தாக்குதல்களை அதிகரித்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் ஹமாஸ் அமைப்பின் பல நிலைகள் அழிக்கப்பட்டன என்று அந்த நாடு தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் 313 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று பலஸ்தீன பிரதமர் அப்பாஸ் அறிவித்துள்ளார்.

இதனிடையே, லெபனானிலிருந்து ஹிஸ்புல்லா போராளிகளும் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல்களை தொடங்கியுள்ளனர். இதைத் தொடர்ந்து லெபனானுடனான எல்லைகளை இஸ்ரேல் மூடியுள்ளது. (ஐ)



# நீண்ட மற்றும் கடினமான போரில் நாம் இறங்குகிறோம்

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

ஜெருசலேம், ஒக். 09

இஸ்ரேலின் பிரதமர் ஹமாஸுக்கு எதிராக தனது நாடு “நீண்ட மற்றும் கடினமான போரில் இறங்குகிறது” என்றார்.

“ஹமாஸின் கொலைகாரத் தாக்குதலால் எங்கள் மீது போர் திணிக்கப்பட்டது,” என்று நெதன்யாகு எக்ஸ் தளத்தில் எழுதினார். “தாக்குதல் தொடங்கியது மற்றும் “இலக்குகள் அடையப்படும் வரை ஓய்வு இல்லாமல் தொடரும். இஸ்ரேல் குடிமக்களுக்கு பாதுகாப்பை மீட்டெடுப்போம், நாங்கள் வெற்றி பெறுவோம்” என்றார்.

இதேவேளை, இஸ்ரேலின் பாதுகாப்பு சபை காசாவில் மின்சாரம், எரிபொருள் மற்றும் பொருட்களை வழங்குவதை நிறுத்த முடிவு செய்துள்ளது. அத்துடன், “ஹமாஸின் இராணுவ மற்றும் அரசாங்க திறன்களை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

முற்றுகையிடப்பட்ட காசா பகுதியில் வசிக்கும் 23 இலட்சம் பலஸ்தீனியர்கள் பெரும் மனிதாபிமான நெருக்கடியை சந்தித்துள்ளனர். (ஐ)



# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் 2 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பு!

## பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர்

காபூல், ஒக். 09

மேற்கு ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை 2,000 பேர் என்று தலிபான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மூத்த தலிபான் தலைவர், இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று கூறினார்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் ஆப்கானிஸ்தானை தாக்கிய அதிபயங்கரமான நிலநடுக்கமாக இதுவே கருதப்படுகிறது.

கத்தாரை தளமாகக் கொண்ட தலிபான் செய்தித் தொடர்பாளர் சுஹைல் ஷஹீன், ஹெராத் மாகாணத்தில் 6.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தை அடுத்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பலரை காணவில்லை என்றும் கூறினார்.

பேரழிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூடாரங்கள், மருத்துவம் மற்றும் உணவுப் பொருட்கள் அவசரமாக தேவைப்படுகின்றன. உள்ளூர் வணிகர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் தேவைப்படும் மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் என்றும் ஷாஹீன் கூறினார்.

முன்னதாக, தகவல் மற்றும் கலாச்சார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அப்துல் வாஹித் ராயன், அசோசியேட்டட் பிரஸ்ஸிடம், நிலநடுக்கம் மற்றும் வலுவான பின்அதிர்வுகளில் 2,000 க்கும் மேற்பட்டோர் இறந்தனர் என்று கூறினார். சுமார் ஆறு கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன, மேலும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர் என கூறினார்.

சனிக்கிழமை பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை 320 பேர் இறந்ததாக முதற்கட்ட புள்ளிவிவரத்தை வழங்கியது. பின்னர் அந்த எண்ணிக்கை இன்னும் சரிபார்க்கப்பட்டு வருவதாகவும், செஞ்சிலுவைச் சங்கம் 500 பேர் கொல்லப்பட்டனர் என்றும் கூறியது.

சனிக்கிழமை ஹெராத் நகரின் வடமேற்கே 40 கி. மீ. தொலைவில் 6.3 ரிக்டர் அளவில் பல நிலநடுக்கங்கள் ஏற்பட்டன என்று அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவித்துள்ளது. (ஐ)

# மெக்சிக்கோ விபத்தில் 29 அகதிகள் உயிரிழப்பு

மெக்சிக்கோ சிற்றி, ஒக். 09

அகதிகளை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்தில் சிக்கியதில் மெக்சிக்கோவில் 29 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

அமெரிக்காவுக்கு, மெக்சிகோ நாட்டின் ஊடக பலர் அகதிகளாக செல்ல முயற்சித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் தெற்கு மெக்சிகோவில் ஒரு பேருந்தில் வெனிசுலா, ஹைதி ஆகிய நாடுகளை சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட அகதிகள், அமெரிக்காவுக்கு சென்றனர். அப்போது ஒக்சாக்கா நெடுஞ்சாலையில் அந்த பேருந்து விபத்தில் சிக்கியது.



சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து தாறுமாறாக ஓடி கவிழ்ந்தது. இதில் மூன்று சிறுவர்கள் உள்பட 29 பேர் பலியானார்கள். 19 பேர் காயம் அடைந்தனர். அவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மெக்சிகோவில் அகதிகளை ஏற்றி செல்லும் வாகனங்கள் அடிக்கடி விபத்துகளில் சிக்குவது நடந்து வருகிறது. அந்த வாகனங்களை சாரதிகள் அதிவேகமாக ஓட்டி செல்வதால் விபத்துகள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (ஐ)

# காலநிலை அனர்த்தங்களால் 7 பேர் மரணம்; 23 பேர் காயம்!

## 54 ஆயிரத்து 440 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 09

கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களால் 7 பேர் உயிரிழந்தனர். 23 பேர் காயமடைந்தனர். 54 ஆயிரத்து 440 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் 273 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 41 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கேகாலை மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் 278 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாவட்டத்தின் மூன்று செயலர் பிரிவுகளில் 70 குடும்பங்களை சேர்ந்த 293 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மாவட்டத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்துள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தின் 13 பிரதேச செயலர் பிரிவுகளில் 865 குடும்பங்களில் 3 ஆயிரத்து 203 பேர் பாதிக்கப்பட்டுள்ளது டன் கம்பஹா மாவட்டத்தில் 12 பிரதேச செயலர் பிரிவுகளில் 134 குடும்பங்களில் 593 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2, 114 குடும்பங்களைச் சேர்ந்த 8, 597 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர்.

காலி மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்தனர். நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும், புத்தளம் மாவட்டத்தின் இரண்டு பிரதேச பிரிவுகளில் 52 குடும்பங்களை சேர்ந்த 193 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 204 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்தார் - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெண் பொலிஸிடம் ரயிலில் சங்கிலி பறிப்பு

கொழும்பு, ஒக். 09

கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயிலில் பயணித்த பெண் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கழுத்தில் காணப்பட்ட சங்கிலியை ரம்மலைகொடுவை ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து ஒருவர் பறித்துள்ளார் என்று கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதக்கத்துடன் கூடிய தங்கச் சங்கிலியின் பெறுமதி சுமார் இரண்டே கால் இலட்சம் ரூபாய் என பொலிஸ் பரிசோதகர் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த பொலிஸ் பரிசோதகர் கண்டி கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றுபவராவார். (ஐ)

# இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் இலங்கையர் ஒருவர் காயம்!

கொழும்பு, ஒக். 09

இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் சிக்குண்டு இலங்கையர் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல் ரமல்லாவில் உள்ள தூதரகங்கள் நிலைமையை உன்னிப்பாக அவதானித்த வண்ணமும் உள்ளன. மோதல் இடம்பெறும் பகுதிகளில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் இலங்கையர் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளானர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# நிலவும் மழை காலநிலையால் சிறுவர்க்கு நோய் பரவும்நிலை!

கொழும்பு, ஒக். 09

நிலவும் மழையுடனான காலநிலையை அடுத்து சிறுவர்களிடையே நோய் நிலைமை அதிகரித்து வருவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு வயிற்று போக்கு, டெங்கு மற்றும் எலி காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பு நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, சிறுவர்களுக்கு 3 நாட்களுக்கு மேல் நோய் நிலைமை தொடருமாயின் உடனடியாக மருத்துவர் ஒருவரை தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# கொழும்பு வீதிகளின் மரங்கள் மாநகர சபைக்கே உரியவை!

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

கொழும்பு, ஒக். 09

கொழும்பின் பல பிரதான வீதிகள் மற்றும் கொழும்பு நகர எல்லையோரங்களில் உள்ள மரங்கள் மாநகர சபைக்கு உரியவை என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ். வீரகோன் தெரிவித்தார்.

கொழும்பு பேஸ்லைன் வீதி மற்றும் ஏனைய இரண்டு வீதிகள் மாத்திரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது எனவும் ஏனைய வீதிகள் கொழும்பு மாநகர சபையால் பராமரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு நகர எல்லையில் அபாய நிலையில் உள்ள மரங்களை கொழும்பு மாநகர சபை அகற்ற வேண்டும் எனவும்



பணிப்பாளர் நாயகம் குறிப்பிடுகின்றார்.

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் கொழும்பு மாநகர சபையில் உள்ள பழமையான மரங்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற தடை!

## ஆராய்கிறது தேசிய கல்வி நிறுவகம்

கொழும்பு, ஒக். 09

பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதைத் தடுப்பதில் தேசிய கல்வி நிறுவகம் கவனம் செலுத்தியுள்ளது. இந்தத் தேர்வுக்கான தேவையற்ற போட்டியைக் குறைப்பதே இதன் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவது கட்டாயமில்லை என சுற்றறிக்கை ஒன்றுள்ளது. மேற்படி சுற்றறிக்கையை அமுல்படுத்துவதன் மூலம் மேற்கண்ட நோக்கங்களை அடைய முடியும் என தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படாததால் பரீட்சைக்குத் தோற்றுவதைத் தடுப்பதில் எவ்வித அநீதியும் இல்லை எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதே தேர்வின் முதன்மை நோக்கம் என்பதால், பிரபல பாடசாலைகளில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குழந்தைகளை ஒன்றாம் வகுப்பிலிருந்தே கண்டறிந்து தனித் திட்டமொன்றை அமல்படுத்த வேண்டும் என்று அதிகாரி தெரிவித்தார். தேவைப்பட்டால், அவர்கள் மட்டுமே தேர்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

எதிர்காலத்தில் கிளஸ்டர் பாடசாலை முறையை ஆரம்பிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த முறையின்படி, ஆறாம் வகுப்புக்கு மேல் உள்ள ஒரு பாடசாலையை சுற்றி பல தொடக்கப் பாடசாலைகள் நிறுவப்படும், மேலும் அந்த நியமிக்கப்பட்ட பாடசாலைகளின் குழந்தைகளை அந்தந்தப் பாடசாலையில் ஆறாம் வகுப்பில் சேர்க்க வேண்டும். இதன்மூலம் புலமைப்பரிசில் பரீட்சையில் போட்டியை குறைக்க முடியும் எனவும் அமைச்சு கூறுகிறது. (ஐ)

# மருந்துகளுக்கு விலை சூத்திரம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஒக். 09

எட்டு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படாத மருந்துகளுக்கான விலை சூத்திரத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைய சட்டம், இறக்குமதியாளர், விநியோகஸ்தர் மற்றும் சந்தைப்படுத்துபவர் ஆகியோருக்கு இடையேயான ஒப்பந்தத்தின் பேரில் விலை சூத்திரம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது.

ஆனால், எட்டு வருடங்களாக நடைமுறைப்படுத்த முடியாத விலை சூத்திரத்தை தயாரித்த தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் விலைக் குழு மருந்து இறக்குமதியாளர்களுக்கும் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்துக்கும் வழங்கியுள்ளது.

இரண்டு தரப்பினருடனும் பல தடவைகள் கலந்துரையாடிய தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபை, இலங்கையில் மருந்துகளை இறக்குமதி செய்யும் போது அதிகரிக்கப்பட்ட தொகையை பரிசீலித்து இலாபம் மற்றும் விலை அறிவிக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம் 60 வகையான மருந்துகளின் விலையை கட்டுப்படுத்தியுள்ளது. அவற்றின் உற்பத்தி நிறுவனங்களின்படி, சுமார் ஐநூறு வகையான மருந்துகள் உள்ளன. விலைக் கட்டுப்பாட்டுக்கு உட்படாத 6,500 நிறுவனங்களின் மருந்துகளுக்கு இந்த விலை சூத்திரம் அமுல்படுத்தப்படவுள்ளது.

தற்போதைய பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்ததன் பின்னர், விலை சூத்திரம் தொடர்பான அறிக்கை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அமைச்சிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் பெறப்பட்ட அனுமதியின் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படும். மருந்துகளுக்கு விலை சூத்திரம் தேவை என அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றது. (ஐ)

## இரு...

காணொலியை பதிவிட்டு விட்டு மீண்டும் சீலாமுனை நோக்கி திரும்பி னர். அப்போது தோணி கவிழ்ந்தது.

துரிதமாக செயல்பட்ட அந்தப் பகுதி மக்கள் அவர்களை மீட்டனர். எனினும், அதற்குள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். நான்கு இளைஞர்கள் காப்பாற்றப்பட்டு மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் சீலாமுனையை சேர்ந்த தவசீலன் கிருசாந்த் (வயது 19), மாமாங்கத்தை சேர்ந்த பிரபாகரன் பிருஜனன் (வயது 18) ஆகியோரே உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சகல...

செங்கலடி மத்திய கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது, பண்ணையாளர்கள் சார்பில், பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீ. தியாகராசா செயலாளர் பா. பரசுராமன் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசியர் த. ஜெயசிங்கம் அடங்கிய குழுவினர் பங்கேற்றிருந்தனர்.

இந்த சமயத்தில், மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் முகங் கொடுத்து வரும் பிரச்னைகள் குறித்து அவர்கள் மனு ஒன்றை கையளித்தனர்.

பண்ணையாளர்கள் முகங் கொடுத்து வரும் பிரச்னைகள் சம்பந்தமாக எடுத்துரைத்தார். அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பிலும் அதீத கவனம் எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

தம்மை சந்தித்தவர்களிடம் இந்தப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு எட்டும் பொருட்டு கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், மகாவலி அதிகாரசபை, வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பண்ணையாளர்கள் அனைவரையும் ஒரேமேசையில் அழைத்து கலந்துரையாடி நிரந்தர தீர்வை விரைவில் வழங்குவதாக உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## செங்கலடியில்...

பகுதியில் பெருமளவான கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டன. அத்துடன், தண்ணீர் தாரை வாகனம், கண்ணீப்புகை குண்டு வீசும் துப்பாக்கிகள் என்பவற்றையும் அவர்கள் வைத்திருந்தனர். இதே நேரமும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களிடம், நீதிமன்ற தடையுத்தரவு உள்ளதாகவும் வீதியை மறித்து போராட முடியாது என்றும் பொலிஸார் எச்சரித்தனர்.

இந்த நிலையில் வீதித் தடைகளை கடந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முனைந்தபோது இரு தரப்பினருக்கும் இடையே இழுபறிநிலை ஏற்பட்டது. இதனால், அந்தப் பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டு பதற்றநிலை உருவானது.

இந்த சமயத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத் தலைவியை பொலிஸார் தாக்கினர். அத்துடன், அவரை இழுத்து சென்று வெளியேற்றினர்.

இந்த போராட்டத்தால் வாழைச்சேனை - மட்டக்களப்பு பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது.

இந்த போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா. சிறிநேசன், பா. அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி சுகாஸ், தேசிய அமைப்பாளர் சுரேஸ், அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ஐ)

## ஹர்த்தால்...

கலந்து கொண்டு கருத்துகளை தெரிவிக்க முடியும் என்று தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

## வர்த்தகரை...

செய்வதற்காக அவரது வர்த்தக நிலையத்துக்கு அண்மையாக வந்த போதே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான சிப்பாய்கள் இருவரும் விடுமுறையில் வந்து வர்த்தகரை கொல்லும் நோக்கில் அங்கு சென்றனர் என்று அறிய வருகின்றது.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாகபட்டினத்தில்...

உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கிறார். இதற்கான சோதனை ஓட்டமாகவே செரியாபாணி கப்பல் நேற்று மதியம் 1.15 மணிக்கு காங்கேசன் துறையை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் பணியாற்றும் 14 பணியாளர்கள் மட்டுமே வருகை தந்திருந்தனர். இந்த பரீட்சார்த்த நடவடிக்கைகளின் போது கப்பல் சேவைக்கு பயன்படுத்தப்படும் கடல் பாதை, கடல் மற்றும் காலநிலை நிலவரம் சகல விடயங்களும் கணக்கெடுக்கப்பட்டது.

பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவடைந்ததமையை கேக் வெட்டி கொண்டாடினர். 30 நிமிடங்கள் தரித்து நின்ற கப்பல் மீண்டும் மதியம் 1.45 மணியளவில் நாகபட்டினம் நோக்கி புறப்பட்டது.

இந்தக் கப்பல் சேவைக்கு இரு வழி கட்டணமாக 53 ஆயிரத்து 500 ரூபாயும் ஒருவழிக் கட்டணமாக 27 ஆயிரம் ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அத்துடன், பயணி ஒருவர் 40 கிலோ வரை பொருட்களை கொண்டு செல்லமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

பாதிப்புக்குள்ளாகும் மீனவ பிரச்னைகளுக்கு தீர்வு கிடையாதா? இதற்கு நிரந்தர தீர்வு என்ன?

பதில்- நீங்கள் கூறியது போன்று இரு தரப்பிலும் தமிழ் பேசும் மீனவர்களே உள்ளனர். பிரச்னை என்னவென்றால் மீன்களுக்கு எல்லை என்று இல்லை. மீன்கள் எல்லா பக்கங்களும் செல்லக் கூடியன. மீனவர்கள் மீன்களை பின் தொடர்ந்து சென்று பிடிக்கிறார்கள். பாக்குநீரிணை ஒரு சிறிய பகுதியாகும். இதுப்பற்றி விரிந்த பேச்சுகள் நடத்து கின்றோம். தற்போது உடன்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. கைதான இந்திய மீனவர்கள் சிலர் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை பிடிக்கப்படும் படகுகளும் விடுவிக்கப்படுகின்றன. வட பகுதியில் சிறந்த மீன்பிடி வளம் உள்ள பகுதியாகும்.

கேள்வி- இந்திய மீனவர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்கி மீன் பிடிக்கக் கூடிய இந்தியாவின் முன்மொழிவுகள் பற்றிய உங்களது கருத்து என்ன?

பதில் - ஆமாம். அதைப்பற்றி பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு பயணம் செய்திருந்த போதும் பேசப்பட்டது.

கேள்வி- இந்த திட்டத்தை பரீசிலிக்க தயாராக இருக்கிறீர்களா?

பதில்- ஆம். பரிசீலிக்க தயாராகவே இருக்கிறோம். இருப்பினும் இந்த இரண்டு தரப்பு மீனவர்களின் ஒத்துழைப்புகளும் அவசியமாக உள்ளது. ஏனென்றால் இது அரசு தரப்பு சார்ந்த விடயம் மட்டுமல்ல. பிரதானமாக மீனவர்கள் சம்பந்தப்பட்டது. இந்த விவகாரத்தில் இருதரப்பு புரிந்துணர்வு கட்டாயம் இருக்க வேண்டும். (ஐ)

# நாட்டை தாரை வார்க்கும் செயலிலேயே ஆட்சியாளர்கள்!

## மகிந்தலை மகா விகாராதிபதி

கொழும்பு, ஒக். 09

ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நாட்டை தாரைவார்க்கும் செயல்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இதனைத் தடுக்க மக்களுடன் இணைந்து பணியாற்ற போவதாகவும் மிகிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனு தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்ளூர் மீனவர்கள் எவ்வாறு ஜீவனோபயத்தைக் கொண்டு நடத்துவார்கள்?

இன்று முழு நாடுமே தாரைவார்க்கப்பட்டு விட்டதை போன்ற நிலையே உள்ளது. நிர்வாகிகள் வெளிநாடுகளுக்கு சென்று உடன்படிக்கைகளை செய்து வருகிறார்கள்.

வந்து ஒரு கிழமைக்கு பின்னரோ அல்லது ஒரு மாதத்திற்கு பின்னரோ நாட்டு வளங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், அடகு வைத்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இந்த ஆட்சியாளர்கள் நாட்டு மக்களின் அவயங்களை கூட விற்றுள்ளனர்.

நாட்டில் தற்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் மனித - யானை மோதல் அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர் இந்த நிலைமை காணப்படவில்லை. இருப்பினும் இன்று சடுதியாக அதிகரித்துள்ளது. காரணம் அரசாங்கத்தில் உள்ளவர்கள் வனப் பகுதிகளில் உள்ள

இடங்களை அபகரித்து அங்கு கட்டிடங்களையும், ஹோட்டல்களையும், நட்சத்திர விடுதிகளையும் அமைத்துள்ளனர். இதன் காரணமாக யானைகள் வனப்பகுதிகளை விட்டு வெளியேறுகிறது. அத்தோடு அவற்றினால் மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மின்வேலிகளும் முறையாக நிர்மாணிக்கப்படவில்லை.

எனவே பாராளுமன்றத்தில் உள்ள 225 பேருக்கும் மக்கள் முன்னிலையில் வந்து உரையாட முடியாது. அதற்கான உரிமையோ அல்லது தகுதியோ அவர்களிடம் இல்லை என்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு முகங்களில், வெவ்வேறு கட்சிகளினூடாக வருகை தருவார்கள். அதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் ஏமாறக்கூடாது. மக்களுடன் இணைந்து மோசமான ஆட்சியாளர்களிடத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு நாம் தொடர்ந்தும் செயல்படுவோம் - என்றார். (ஐ)

# நாட்டில் இனவாதத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சி!

## சந்தேகிக்கிறார் முஜீபுர் ரஹ்மான்

கொழும்பு, ஒக். 09

நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிக்க சிலர் முயற்சித்து வருகின்றனரா என்ற சந்தேகம் எழுவதாக தோன்றுகின்றது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முஜீபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

குருந்தூர் மலை விவகாரத்தை முன்னிறுத்தி பெரும் பிரச்னைகளை தோற்றுவிப்பதற்கு கடந்த காலங்களில் பல சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை தொடர்ந்து மட்டக்களப்பு காணிப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்டு இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்தனர். சமூக ஊடகங்களின் மூலமாகவும் இனங்களுக்கு இடையில் பிரச்னையை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிக்க சிலர் முயற்சித்து வருகின்றனரா என்ற சந்தேகம் எழுவதாக தோன்றுகின்றது. ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் 7, 8 மாதங்களே காணப்படும் நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் ஏன் தோற்றுவிக்கப்படுகிறது என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

மேலும் கட்சியின் தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்பட்டமை தவறு என நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இதன்காரணமாக அவரது பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகும். இடைக்கிடையே கட்சி தாவும் தரப்பினருக்கு உயர் நீதிமன்றம் விடுத்துள்ள அபாய எச்சரிக்கையாக இதை நாம் கருதுகிறோம். குறிப்பாக கட்சியிலிருந்து பலர் அமைச்சு பதவிகளுக்காக சென்றார்கள்.

இவர்களுக்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரலாற்று சரித்திரம் மிக்க தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

விருப்பு வாக்கு வழங்குவதற்கு முன்னதாக கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். கட்சி எடுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்படவேண்டும்.

கட்டுப்பட முடியாவிட்டால் பதவியில் இருந்து விலக வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்குகளை பெற்று விட்டு பின்னர் பாராளுமன்றத்தில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக செயல்பட நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை. நஸீர் அஹமட் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எதிர்காலத்தில் மேலும் பலருக்கு படிப்பினையாக அமையும் - என்றார்.

## அடுத்த...

மகாவலி திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் போர் காரணமாக தடைப்பட்டது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தை விரைவாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விவசாயம், கடற்றொழில் மற்றும் உல்லாச பயணத்துறை என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. விவசாயத்துறையில் நவீனத்துவம் உட்புகுத்தப்படும். பண்ணையாளர்களுக்கு தினமும் பத்து தொடக்கம் 12 லீற்றர் பால் கறவைப் பசுக்கள் வழங் கப்படும். இதேபோன்று இலட்சக் கணக்கான உல்லாசப்பயணிகள் வரக்கூடிய பிரதேசமாக கிழக்கு மாகாணம் மாற்றப்படும்.

செங்கலடி மத்திய கல்லூரியின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று பாடசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# இந்திய மீனவரை எமது கடலில் அனுமதித்தால் பலிகளே ஏற்படும்!

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையம்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 09

**இலங்கை கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது என்ற இந்திய தரப்பின் முன்மொழிவை இலங்கை அரசாங்கம் இரத்துச் செய்யவேண்டும். அல்லது நாடளாவிய ரீதியில் போராட்டம் வெடித்து, கடலில் முரண்பாடுகள் ஏற்பட்டு பலிகள் ஏற்படும் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் எம். பி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.**

நேற்று அவர் தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், எமது நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் இந்திய இழுவை படகுகளின் வருகையால் மிகவும் துன்புற்று இருக்கின்ற இந்த வேளையில் நாம் பல போராட்டங்கள் - பல கலந்துரையாடல்களை நடத்தி வெற்றி காணாத நிலையில் மிகவும் அல்லல்பட்டு கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே, ஓரிரு தினங்களுக்கு முன்னர் எமது நாட்டு பிரதமர் அவர்கள் இந்தியா சென்றிருந்த வேளையிலே எமது வீரர்களுடைய பிரச்னை சம்பந்தமாக அங்கு ஒரு கலந்துரையாடல் நடந்திருக்கின்றது.

அங்கிருந்த ரைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவருடைய கேள்விக்கு நமது நாட்டு பிரதமர் பதில்அளித்துள்ளார். அந்தப் பதிலில், இலங்கையின் வடக்கு கடல் மிகவும் நல்ல மீன்பிடி மையமாக இருக்கின்றது. அதன் காரணமாக இந்தியாவில் உள்ள மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள்ளே மீன் பிடிப்பதற்கு இந்தியாவால் முன்மொழியப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக நாம் கரிசனையோடு ஆய்வு செய்து வருகின்றோம்.

இது இரு நாட்டு அரசுகளும் பேசி தீர்க்கக்கூடிய ஒரு விடயம் அல்ல. இது மீனவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்னை. எனவே மீனவர்கள்தான் இதைப் பற்றி பேசி ஒரு நல்ல இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். எனவே இருநாட்டு மீனவர்களும் புரிந்துணர்வுடன் பேசி நல்ல ஒரு கருத்தையும் இணக்கப்பாட்டையும் எட்ட வேண்டும் என்றும், அந்த வகையில் இந்த முன்மொழிவுக்கு ஒரு விடை கிடைக்கும் என்ற கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

அவர் பேசியிருக்கின்ற பேச்சின் பிரகாரம் இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களை மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதற்கான ஒரு தொனி அங்கே தெளிவாக தென்படுகின்றது. இது இலங்கை வடபுலத்திலே வாழுகின்ற மீனவர்களுக்கு ஏமாற்றத்தை தந்துள்ளது.

எமது கடற்பரப்புக்குள்ளே அந்நிய மீனவர்கள் அல்லது இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது என்பது காலம் காலமாக எமது மீனவர்களிடையே ஒரு முரண்பாட்டையும் ஒரு களப்போரையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. வளங்களை அழிக்கின்றார்கள் - வாழ்வாதாரத்தை சூறையாடுகின்றார்கள்.

அதற்கப்பாலே எங்களது தொழில் உபகரணங்களை அறுத்து நாசமாக்கி எங்களுக்கு பொருளாதார சிக்கலை ஏற்படுத்துகின்றார்கள்.

இந்த விடயத்திலே அரசாங்கம் முன்னின்று எமது கடலையும் கடல் வளத்தையும் இந்தியாவுக்கு கையளிக்குமேயானால், யாழ்ப்பாண நகரில் மட்டுமல்ல தலைநகரிலும், நாடளாவிய ரீதியில் கடற்றொழில் மக்கள் வாழுகின்ற 15 மாவட்டங்களிலும் போராட்டங்களை நாம் செய்வோம்.

எனவே, அரசாங்கம் இந்த கடல் வளத்தை கையளிப்பதை மீள் பரிசீலனை செய்துவிட்டு எமது கடல் வளத்தை எம்மிடமே தந்துதவ வேண்டும். ஒரு தவறான முடிவெடுத்து எம்மை அநாதைகளாகி விட வேண்டாம் என்பதை மிகவும் அன்பாக அரசாங்கத்திடம் கேட்டு, இந்தியாவிடம் எமது கடல் வளத்தை கையளிக்கின்ற முன்மொழிவு இரத்து செய்து அதன் ஊடாக எமது வாழ்வாதாரம் சிறக்க அரசாங்கம் எமக்கு கை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (ஐ)

# பயணிகளை ஏற்றுவதில் போட்டி; இரு பேருந்துகள் மோதி விபத்து!

கொழும்பு, ஒக். 09

பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட போட்டியில் இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகின. இதில், 6 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டம் ஹொரணை, பல்லாபிட்டி பிரதேசத்தில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றது.

இதையடுத்து, விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதிகளில் ஒருவரை பயணிகளும் பிரதேச மக்களும் தாக்கினர். பின்னர், பொலிஸார் தலையிட்டு சாரதியை மீட்டதுடன், அவரை கைது செய்தனர்.

இந்த விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் காயமடைந்தனர். (ஐ)

# ஜனாதிபதி சட்டத்தரணி நியமனம் 300 விண்ணப்பம் 34 பேருக்கே தகுதி!

கொழும்பு, ஒக். 09

ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்படுவதற்கு ஜனாதிபதி செயலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பியிருந்த 300 சட்டத்தரணிகளில் 34 பேர் மாத்திரமே தேவையான தகுதிகளை கொண்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சட்டத்தரணி நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை பூர்த்தி செய்வதற்காக விண்ணப்பதாரர்களின் தகுதிகளை மதிப்பிடுவதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு தேவையான தகுதிகளைக் கொண்ட 34 பெயர்களின் பட்டியலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பவுள்ளது. ஜனாதிபதி தனது விருப்புரிமையைப் பயன்படுத்தி அவர்களில் 10 பேரை ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிப்பார். ஜனாதிபதி சட்டத்தரணிகள் நியமனம் தொடர்பான வர்த்தமானியின் பிரகாரம் வருடாந்தம் 10 நபர்களை மாத்திரமே ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்க முடியும்.

ஜனாதிபதி சட்டத்தரணியை நியமிப்பதற்கான அளவுகோல்களை குறிப்பிடும் வர்த்தமானி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் உயர் நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைய வெளியிடப்பட்டது. (ஐ)

# கிரீட் உப மின் நிலையம் வெள்ளத்தில் மூழ்கும் நிலை!



கொழும்பு, ஒக். 09

பலத்த மழை காரணமாக நீர்மட்டம் உயர்வடைதால் மாத்தறை மின்சார சபையின் கிரீட் உப மின் நிலையம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாக மின்சக்தி - எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தேவையேற்படின், பாதுகாப்பு நடவடிக்கையாக மாத்தறை கிரீட் உப மின் நிலையத்தை பாதுகாப்பாக மூடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தெனியாய மற்றும் பெலியத்த உப மின் நிலையங்களின் ஊடாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்க, மின்சார சபை திட்டமிட்டுள்ளதாகவும் உப நிலையங்கள் மூடப்பட்டதன் பின்னர் அங்கு பணிபுரியும் மின்சார சபை ஊழியர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்காக கடற்படையினரால் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மேற்குலகின் மீதான ஏமாற்றமே சர்வதேச விசாரணை நிராகரிப்பு

## லக்ஷ்மன் கிரியெல்ல எம். பி. சாடல்

கொழும்பு, ஒக். 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான சர்வதேச விசாரணையை நிராகரிப்பதற்கு காரணம் மேற்குலகின் மீதான ஏமாற்றமே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த நான்கு வருடங்களாக உள்ளக விசாரணைகள் மூலம் நீதி கிட்டவில்லை என்பதனாலேயே சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜேர்மன் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக உள்ளக ரீதியிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படும், சர்வதேச விசாரணையை தான் முழுமையாக நிராகரிப்பதாக அறிவித்திருந்தார்.

மேலும், நாட்டை பொருளாதார ரீதியில் மீட்டெடுப்பதாக கூறி ஆட்சியை பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது அந்த இலக்கை அடைய முடியாது நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்.

குறிப்பாக, மேற்குலகம் அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் நாட்டை மீட்டெடுப்பதற்கு கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் தற்போது அதற்கான சாத்தியப்பாடுகள் குறைந்து வருகின்றன.

இதன்காரணமாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜேர்மன் ஊடகத்துடனான நேர்காணலின் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான சர்வதேச விசாரணைக் கோரிக்கையை நிராகரித்தார். கத்தோலிக்க ஆயர் பேரவைக்கும், கர்தினாலுக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதாக குறிப்பிட்டார்.

ஆனால், கத்தோலிக்க ஆயர் பேரவையும், கர்தினாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாக அறிவித்துள்ளனர். அது மட்டுமன்றி, கடந்த நான்கு ஆண்டுகளாக உள்ளக விசாரணைகளினால் எவ்விதமான முன்னேற்றங்களும் காணப்படவில்லை. ஆகவே சர்வதேச விசாரணையின் ஊடாகவே நியாயமான உண்மைகளை கண்டறியலாம் என்ற எமது முடிவில் மாற்றமில்லை - என்றார். (ஐ)

# மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை, ஒக். 09

பழுதடைந்த மின்குமிழை பரிசோதித்த சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

திருகோணமலை - மூதூர் - தோப்பூர் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், தோப்பூர் -அல்லைநகர் பகுதியை சேர்ந்த 16 வயதுடைய கிலுறுதீன் அம்ஹர் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

வீட்டில் பழுதடைந்த மின்குமிழை சோதனையிட்டுக் கொண்டிருந்தபோதே மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தென்னாபிரிக்கா சாதனை; இலங்கை அணி படுதோல்வி!



புதுடில்லி, ஒக். 09

நடப்பு உலகக் கிண்ண தொடரின் 4ஆவது போட்டியில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

429 ஓட்டங்கள் என்ற மிகப்பெரும் இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணிக்கு குசல் பெரேரா 7 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். ஆனாலும், குசல் மெண்டிஸ் 76 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார். அதேபோல் சரித் அசலங்கா 79, தசூன் சானகா 68, கசூன் ராஜித 33, சதீர சமர விக்ரம 23 ஓட்டங்கள் எடுத்து உதவினர். ஆனால், தனஞ்சய டி சில்வா 11, மதீஷ பத்திரண 5, டில்ஷான் மதுஷங்கா 4 ஓட்டங்கள் என மற்ற வீரர்கள் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறியதுடன் விரைவாக விக்கெட்டையும் பறிகொடுத்தனர். இதனால் இலங்கை அணி 44.5 ஓவருக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 326 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் தென்னாபிரிக்கா அணி 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா அணி தரப்பில் ஜெரால்ட் கோட்ஸி 3 விக்கெட்களும் கேசவ் மகாராஜ், ரபாடா, மார்கோ ஜான்சன் தலா 2 விக்கெட்களும் கைப்பற்றினர்.

அருண் ஜெட்லி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்திருந்தது.

இதன்படி தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸை குயின்ரன் டி கொக், தெம்பா பவுமா இணை தொடங்கியது. இதில் டில்ஷான் மதுஷங்க வீசிய இரண்டாவது ஓவரில் தெம்பா பவுமா 8 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரஸ்ஸி வான் டெர் டுசென், குயின்ரன் டி கொக்குடன் கைகோக்க இருவரும் இலங்கையின் பந்துவீச்சை விளாசித் தள்ளினர். கிட்டதட்ட 30 ஓவர்கள் வரை அடித்தாடிய இந்த இணையை 31ஆவது ஓவரில் மதீஷ பத்திரண பிரித்தார். இதில் 84 பந்துகளில் 100 ஓட்டங்களை குவித்த டி கொக் ஆட்டமிழந்து வெளியேறினார்.

110 பந்துகளில் 108 ஓட்டங்களை குவித்து அதிரடி காட்டிய ரஸ்ஸி வான் வான் டெர் டுசென் விக்கெட்டை துனித் வெல்லலகே கைப்பற்ற 40 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்த தென்னாபிரிக்கா 291 ஓட்டங்களை குவித்தது. ஹென்ரிச் கிளாசென் 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், எய்டன் மார்க்ரம் 3 சிக்ஸர்களை விளாசி நிலைத்து நின்று ஆடினார். எய்டன் மார்கன் 49 பந்துகளில் சதமடித்து அசத்தினார். சிறிதுநேரத்தில் அவர் விக்கெட்டை டில்ஷான் மதுஷங்க கைப்பற்ற 106 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

49ஆவது ஓவரில் டேவிட் மில்லர் 3 சிக்சர்களை விளாசி வாணவேடிக்கை காட்ட, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்த தென்னாபிரிக்க அணி 428 ஓட்டங்களை குவித்தது. டேவிட் மில்லர் 39 ஓட்டங்களுடனும், மார்கோ ஜோன்சன் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இலங்கை அணி தரப்பில் டில்ஷான் மதுஷங்க 2 விக்கெட்களையும், மதீஷா பதிரனா, துனித் வெல்லலகே தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆஸி. சாதனை தகர்ப்பு:

இலங்கைக்கு எதிராக தென்னாபிரிக்கா குவித்த 428 ஓட்டங்கள்தான் உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டமாகும். இதற்கு முன்னர் 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அவுஸ்திரேலியா 6 விக்கெட்கள் இழப்புக்கு 417 ஓட்டங்கள் குவித்ததே சாதனையாக இருந்தது. இதை தென்னாபிரிக்கா தற்போது முறியடித்துள்ளது. மேலும் உலகக் கோப்பை தொடரில் தென்னாபிரிக்கா 400 ஓட்டங்களுக்கு மேல் குவிப்பது இது 3ஆவது முறையாகும். (ஐ)

# வங்கத்திடம் வீழ்ந்தது ஆப்கானிஸ்தான் அணி!



தர்மசாலா, ஒக். 09

ஆப்கானிஸ்தானை இலகுவாக வீழ்த்தி உலகக் கிண்ணத்தை வெற்றியுடன் தொடங்கியது பங்களாதேஷ் அணி.

ஆப்கானைப் பொறுத்தவரை 2015 உலகக் கோப்பை முதல் ஒருநாள் உலகக் கோப்பைகளில் தொடர்ச்சியாக அடையும் 13ஆவது தோல்வியாகும் இது. பங்களாதேஷ் அணியின் தலைவர் ஷகிப் அல் ஹசன் 3 விக்கெட்களைக் கைப்பற்ற மெஹதி ஹசர்ன் மிராஸ் 3 விக்கெட்களுடன் துடுப்பாட்டத்தில் அருமையான ஒரு அரைசதத்தையும் எடுத்து ஆட்ட நாயகன் விருது வென்றார்.

பங்களாதேஷால் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் ரஹமனுல்லா குர்பாஸ் (47), இப்ராஹிம் சத்ரான் (22), அணித்தலைவர் ஹஸ்மத்துல்லா ஷாஹிதி (18) என்று முதல் 15 ஓவர்களில் 83ஃ1 என்று அருமையான நிலையில் இருந்தனர். ஆனால், ஷகிப் அல் ஹசன் வந்து மேட்சையே தலைகீழாக மாற்றிவிட்டார். இப்ராஹிம் சத்ரானையும் ரஹமத் ஷாவையும் வெளியேற்றினார். மெஹதி ஹசன் மிராஸ் ஆப்கானின் சரிவில் பெரிய பங்களிப்பு செய்து அவர் பங்குக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

தொடக்கத்தில் பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர்கள் ஷார்ட் பிட்ச் ஆக வீச குர்பாஸ், இப்ராஹிம் அதைப் பயன்படுத்திக் கொண்டு ஓவருக்கு ஒரு பௌண்ட்ரி அடிப்பது என்ற ரீதியில் ஆடினர். அப்போது 47 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தை முறியடித்தார். இப்ராஹின் ஸ்வீப் ஆட முயன்று டாப் எட்ஜ் செய்து வெளியேறினார். அதன்பிறகு ரஹமத்தும் அதே பாணியில் வெளியேறினார். 2 விக்கெட்டுகளால் ஓட்டம் எடுப்பு வேகம் குறைந்தது.

மெஹிதியை ஆப்கான் கேப்டன் தடவு தடவென்று தடவி 22 பந்துகளில் 3 ஓட்டங்களையே எடுத்தார். கடைசியில் ப்ரஷர் தாங்க முடியாமல் மெஹதியிடம் அவுட் ஆனார். மறுமுனையில் பொறுமையுடன் ஆடிய அபாய வீரர் குர்பாஸ/ம் நெருக்கடிக்கு உள்ளாகி ஆட்டமிழந்தார். தவறாக முஸ்தபிசுர் ரஹ்மான் பந்தை அடிக்கத் தேர்வு செய்து கொடியேற்றினார்.

அதன் பிறகு 112ஃ3 லிருந்து அடுத்த 44 ஓட்டங்களில் 7 விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது. ஆப்கான் பேட்டிங்கில் கட்டுக்கோப்பு இல்லை, ஷாட் தேர்வுகளும் மோசமாக அமைந்தது. 22 ஓவர்களில் 73 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 37.2 ஓவர்களில் 156 ஓட்டங்களுக்கு சுருண்டது. இலக்கை விரட்டும் போது பங்களாதேஷ் தடுமாற்றத்துடன் தொடங்கியது.

லிட்டன் தாஸ் அடித்த ஷொட்டை பொயிண்ட் பீல்டர் பிடிக்க அரைமேட் தாண்டி ஓடி வந்த தன்சித் ஹசன் ரன் அவுட் ஆனார். லிட்டன் தாஸூம் ஃபாசலுல்லா பரூக்கி பந்தை மட்டையில் வாங்கி ஸ்டம்பில் விட்டுக் கொள்ள 27/2 என்று தடுமாறியது. ஆனால் அதன் பிறகு ஆப்கான் அணி 38 ஓட்டங்களில் இருந்த போது மெஹதி ஹசனுக்கு நஜ்புல்லா ஒரு பிடியை விட்டார். ஒருவேளை இந்தப் பிடியைஎடுத்திருந்தால் ஆப்கான் அணி பங்களாதேஷை கடுமையாக அழுத்தியிருக்கும். மீண்டும் மெஹதி ஹசனுக்கு நவீன் உல் ஹக் பந்தில் முஜீப் ரஹ்மான் இன்னொரு கேட்சை விட்டார்.

அதன் பிறகு அநாவசியமாக ஷொட்களை முயற்சி செய்யாமல் ஒன்று, இரண்டு என்று ஓட்டங்களை எடுத்தனர். ஷாண்ட்டோவும், மெஹதியும். 58 பந்துகளில் மெஹதி அரைசதம் கண்டார். இருவரும் 97 ஓட்டங்களைச் சேர்த்தனர். இதனால் பங்களாதேஷ் பிழைத்தது. இந்தப் இணைப்பாட்டம் உடைந்த போது வங்கதேச வெற்றிக்கு 33 ஓட்டங்கள்தான் தேவையாக இருந்தது. ஷாண்ட்டோவும் அரைசதம் எடுத்தார், கேப்டன் ஷாகிப் அல் ஹசன் ஆட்டமிழந்தது வெற்றியை பாதிக்கவில்லை. ஷாண்ட்டோ ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களை பெற்றார். பங்களாதேஷ் வென்றது. ஆட்ட நாயகன் மெஹதி ஹசன் மிராஸ்.

ஆப்கான் துடுப்பாட்டத்தால் தோற்றது, பிறகு 2 பிடிகளை விட்டதனால் மெஹதியை செட்டில் ஆக விட்டது. இதனாலும் ஒரு வாய்ப்பை இழந்தது. ஆப்கான் முன்னேற இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும். (ஐ)




# 49 பந்துகளில் மார்க்ரம் சதம் அடித்து சாதனை!

புதுடில்லி, ஒக். 09

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் எய்டன் மார்க்ரம் 49 பந்துகளில் சதம் விளாசி சாதனை படைத்தார்.

நேற்று முன்தினம் நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 428 ஓட்டங்கள் குவித்தது.

4ஆவது வீரராக களமிறங்கிய எய்டன் மார்க்ரம்49 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 14 பௌண்ட்ரிகளுடன் சதம் விளாசினார். இதன் மூலம் உலகக் கிண்ண வரலாற்றில் குறைந்த பந்துகளில் சதம் விளாசிய வீரர் என்ற சாதனையை படைத்தார்.

இதற்கு முன்னர் அயர்லாந்தின் கெவின் ஓ'பிரையன் 50 பந்துகளில் சதம் அடித்திருந்தார். அதிரடியாக விளையாடிய மார்க்ரம் 54 பந்துகளில், 106 ஓட்டங்கள் எடுத்து டில்ஷான் மதுஷங்க பந்தில் ஆட்டமிழந்தார். (ஐ)

# உலகக் கிண்ணத் தொடரில் பும்ரா, கோலி புதிய சாதனை




சென்னை, ஒக். 09

உலகக் கிண்ண வரலாற்றில் முதன்முறையாக அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரர்களை டக் அவுட் ஆக்கியதன் மூலம் பும்ரா புதிய வரலாறு படைத்துள்ளார். அதேபோல இந்த பிடியெடுப்பை பிடித்ததன் மூலம் உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக பிடியெடுப்புகளை பிடித்த வீரர் என்ற பெருமையை கோலியும் பெற்றுள்ளார்.

நடப்பு உலகக் கோப்பை தொடரின் 5-வது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா அணி துடுப்பெடுத்தாடியது. இதன்படி டேவிட் வோர்ணர், மிட்செல் மார்ஷ் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். இதில் 2வது ஓவரில் பும்ரா வீசிய பந்து மிட்செல் மார்ஷ் பேட்டில் இன்சைடு எட்ஜாகி கோலியின் கைக்குள் ஐக்கியமானது.

இதன் மூலம் மிட்செல் மார்ஷ் 6 பந்துகளை பிடித்து ஓட்டம் எதுவும் எடுக்காமல் டக்அவுட்டானார். இது ஒருவகையில் பும்ராவின் பழிவாங்கல் என எடுத்துகொள்ளலாம். காரணம் ராஜ்கோர்டில் நடந்த ஒருநாள் போட்டியில் 20 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்து பும்ராவை மார்ஷ் ஆட்டமிழக்க செய்தார். மேலும், மிட்செல் மார்ஷின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் உலக கோப்பை வரலாற்றில் அவுஸ்திரேலிய தொடக்க வீரரரைடக்அவுட்டாக்கி பும்ரா புதிய வரலாறு படைத்துள்ளார்.

அதேபோல இந்த பிடியை பிடித்ததன் மூலம் உலக கோப்பைகளில் அதிக பிடிகளை எடுத்த வீரர் (விக்கெட் காப்பாளர் அல்லாமல்) என்ற பெருமையை அடைந்துள்ளார் விராட் கோலி. இதற்கு முன்னதாக அனில் கும்ப்ளே 14 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் இருந்தார். அவருக்கு அடுத்த இடங்களில் 12 விக்கெட்களுடன் கபில்தேவ், சச்சின் டெண்டுல்கர் இருந்தது குறிப்பிடத்தக்கது.

# போர் பிரகடனம் இஸ்ரேலில் :

ஐங்கரன் விக்கினேஸ்வரா

## இஸ்ரேலை நோக்கிப் பாய்ந்த 5,000 ஏவுகணைகள்!

## போர் கைதிகளாக இஸ்ரேல் ராணுவ வீரர்கள்!!

இஸ்ரேல் ராணுவ நிலைகள் மீது பாலஸ்தீன ஆயுதக்குழுக்கள் எதிர்பாராத வகையில் வான்வழி தாக்குதலில் ஈடுபட்டதால், பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் போர் பிரகடனத்தை செயல்படுத்தியுள்ளது. ஒரு மணி நேரத்துக்குள் 5000 ராக்கெட்டுகள் ஏவப்பட்டுள்ளது.

இஸ்ரேல் ராணுவ நிலைகள் மீது பாலஸ்தீன ஆயுத போராளிகள் எதிர்பாராத வான்வழி தாக்குதலில் ஈடுபட்டதால், பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் ராணுவமும் களம் இறங்கியுள்ளது. இஸ்ரேல் - பாலஸ்தீனம் எல்லைப் பகுதியாக உள்ள காசாவுக்கு இரு தரப்பும் தொடர்ந்து சொந்தம் கொண்டாடி வருகிறது.

பல ஆண்டுகளாக இரு தரப்பும் மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுக்களை இஸ்ரேல் பயங்கரவாதிகளாக அறிவித்துள்ளது. இரு தரப்பும் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என பல நாடுகளும் வலியுறுத்தி வரும் நிலையில், மீண்டும் 5000 ராக்கெட்டுகளை ஏவிய தாக்குதல் சம்பவமானது நடைபெற்றுள்ளது.

ஞாயிறு காலை காசா பகுதியில் பாலஸ்தீன ஆயுத போராளிகள் கிட்டத்தட்ட 5000 ராக்கெட்டுகளை ஏவி இஸ்ரேல் நாட்டின் மீது தாக்குதல் நடத்தியதாக அங்குள்ள உள்ளூர் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளது. காலை 6 மணிக்கு இந்த தாக்குதல் தொடங்கியதாகவும், இதில் பல கட்டடங்கள் தரை மட்டமானதோடு, ராணுவ வீரர்கள், பொதுமக்கள் பலர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பாலஸ்தீன ஆயுத போராளிகள் காசா பகுதிக்கு ஊடுருவியுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில் அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இதனைத் தொடர்ந்து இஸ்ரேலில் போர் பிரகடனம் அமல்படுத்தப்பட்டுள்ளது. கிட்டதட்ட 80 கி.மீ. அளவுக்கு இந்த பிரகடனம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவசர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





**இஸ்ரேலில் உச்சக்கட்ட பதற்றமும், மீண்டும் காசாவில் கடும் சண்டை தொடர்கிறது. நீண்டகால ஆக்கிரமிப்பினை இஸ்ரேல் தொடர்வதால் முடிவிலா துயரில் பாலஸ்தீன மக்கள் அல்லல் படுகின்றனர்**

### ஹமாஸின் “ஆபரேஷன் அல்-அக்ஸா புயல்”

இஸ்ரேலின் சில இடங்களில் ஹமாஸ் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும், காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் செயலிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.



பாலஸ்தீன படைகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் ராணுவத்தினர் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹமாஸின் இராணுவப் பிரிவின் தலைவரான முகமது டெய்ஃப் இந்த தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ளார். அதில், இஸ்ரேலுக்கு எதிராக ஒரு புதிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும், “ஆபரேஷன் அல்-அக்ஸா புயல்” என இதற்கு பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

காசா பகுதியில் இதுவரை நான்கு முறை நடைபெற்ற போரால் ஏராளமான பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். தற்போது அங்கு போர் பதற்றம் நிலவுவதால் இம்முறை பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என கூறப்படுகிறது.

### பிணைய கைதிகளாக இஸ்ரேல் வீரர்கள்:

இஸ்ரேல் - பாலஸ்தீனருக்கு இடையே கடந்த பல ஆண்டுகளாகவே காசா பகுதியில் மோதல் நிலவி வருகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் எந்தவொரு பலனும் கிடைக்கவில்லை. இந்த பகுதியை இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன் என இரு தரப்பும் சொந்தம் கொண்டாடுவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

மீண்டும் மோதல் உச்சமடைந்துள்ள நிலையில், இஸ்ரேல் ராணுவ வீரர்களை ஹமாஸ் படையினர் பிணையக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளதாகத் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளது.

காசா பகுதியில் இருந்து சரமாரியாக ஏவுகணை தாக்குதல் நடைபெற்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். காசாவில் பல்வேறு இடங்களில் இருந்து நடத்தப்பட்ட இந்த ஏவுகணை தாக்குதலில், சுமார்

(15ம் பக்கம் பார்க்க)







ஈழநாடு



# அஷ்ரஃப் வழியில் பயணிக்க ரவூப் ஹக்கீம் முயலவேண்டும்!

-அரசியன்-

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை ஏனைய கட்சி தலைமை போல் தூரநோக்கற்று சிறுபிள்ளைத்தனமாக இயங்கலாகாது




சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஹாபிஸ் நசீரை நீக்கியது சட்ட ரீதியானதே என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அடுத்த கட்டமாக ஹாபிஸ் நசீரின் பாராளுமன்ற உறுப்புரிமையை வறிதாகலாம்.

கட்சிகளின் நிலைப்பாட்டுடன் இணங்கிச்செல்லாதோர் இன்னும் பலர் இருக்கும் போது இயங்குநிலையில் இருக்கும் இருவர்களான ஹாபிஸ் நசீருக்கும் முஷர்ரஃபுக்கும் எதிராக மட்டும் நடவடிக்கை எடுப்பதானது இருவர் மீதான தனிப்பட்ட குரோதத்தையே காட்டுகிறது.

ஆயிரம் தவறுகள் இருந்தாலும் ஹாபீஸ் நசீர் நீண்ட அரசியல் அனுபமுள்ள மக்கள் பிரதிநிதி. மொழியாற்றலும் உள்ளவர். நீண்ட காலத்துக்கு பின் கிழக்கிலிருக்கும் கெபினட் அமைச்சர்.

அதே போல் முஷர்ரஃப் எம்பியும் காத்திரமாக இயங்கிக்கொண்டிருப்பவர். முப்பது வருடங்களாக எவராலும் சாதிக்க முடியாவற்றை அவர் மூன்று வருடங்களுக்குள் சாதித்துள்ளார். இனவாத இலங்கையில் முஷர்ரஃப் எம்பி சாதித்தவை சாதாரணமானவையல்ல.

தனிப்பட்ட குரோதங்களுக்கு கட்சிக்கொள்கை என்று நாமமிட்டு உயிர்ப்புடன் இயங்கிக்கொண்டிருக்கும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையை பறிப்பதால் சமூகத்துக்கு எந்த பயனுமில்லை.

சமூக அரசியல் நானா நீயா போடாடியல்ல. அதற்குமப்பாலிருக்க வேண்டும்.

முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினர்களாகி சொற்ப காலத்துக்குள் கட்சியின் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களுக்கும் ஹிஸ்புல்லாவுக்குமிடையில் முரண்பாடு ஆரம்பமாகிவிட்டது.

எந்த அளவுக்கு முரண்பாடு முற்றியதென்றால் பாராளுமன்றத்திலேயே ஹிஸ்புல்லா சவால் விடும் அளவுக்கு நிலைமை மோசமானது.

நிலைமை இவ்வளவு மோசமானதால் ஹிஸ்புல்லாவின் பாராளுமன்ற உறுப்புரிமையை பறிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு கட்சியின் உயர்பீட உறுப்பினர்களில் பெரும்பாலானோர் வந்து விட்டனர்.

ஹிஸ்புல்லாவின் பாராளுமன்ற உறுப்புரிமையை பறிக்குமாறு மர்ஹூம் அஷ்ரஃப் மீது மிகுந்த அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

கட்சித்தலைமைக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பது உண்மைதான், ஆனால் ஒரு துடிப்புடன் இயங்குகின்ற பாராளுமன்ற உறுப்பினரை பதவி இழக்கச்செய்வது அவரை தேர்ந்தெடுத்த மக்களுக்கு செய்யும் பெரிய அநியாயமாகும்.




ஆகவே ஹிஸ்புல்லாவின் பாராளுமன்ற உறுப்புரிமையை பறிக்கும் எந்த நடவடிக்கையையும் நான் மேற்கொள்ள மாட்டேன் என்று மர்ஹூம் அஷ்ரஃப் தீர்க்கமாக கூறிவிட்டார்.

சட்ட சிக்கல்களும் காரணமாக இருந்திருக்கலாம்.

தனது தலைமைத்துவத்துக்கே சவால் விடும் ஹிஸ்புல்லாவின் மீது மர்ஹூம் அஷ்ரஃபுக்கு எவ்வளவு ஆத்திரம் வந்திருக்கும் என்பதை மர்ஹூம் அஷ்ரஃபின் குணாதிசயங்களை ஓரளவேனும் அறிந்தவர்களுக்கு தெரியும்.

மர்ஹூம் அஷ்ரஃப் கடும் ரோஷக்காரர்,

மட்டுமல்ல சட்ட ஏற்பாடுகளை சாதகமாக பிரயோ




கிக்கத்தெரிந்த மகா கெட்டிக்கார சட்டத்தரணி.

தேவையேற்பட்டால் சட்டங்களை திருத்தி அமைக்குமளவு பிரேமதாஸாவின் பாராளுமன்றத்தை பாவித்துக் கொள்ள மர்ஹூம் அஷ்ரஃபால் முடியுமாயிருந்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி அந்தஸ்துக்கு தகுதியான கால எல்லை இருபதிலிருந்து பதினெட்டு வருடங்கங்களாக பாராளுமன்றத்தால் குறைக்கப்பட்டதும் மர்ஹூம் அஷ்ரஃபுக்காகவே.

வெட்டுப்புள்ளி விவகாரம் அனைவரும் அறிந்தது.

இவ்வளவு இருந்தும் மர்ஹூம் அஷ்ரஃப் ஹிஸ்புல்லாவின் பதவியை பறிக்க முனையவில்லை.

கட்சியின் தற்போதைய தலைவர் ரவூப் ஹகீம் பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவராக இருந்து சபைக்கு தலைமை தாங்கும் ஒரு சந்தர்ப்பத்தில் உரைநிகழ்த்திக் கொண்டிருந்தவருடன் மர்ஹூம் அஷ்ரஃப் வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது மர்ஹூம் அஷ்ரஃபை இருக்கையில் அமருமாறு ரவூப் ஹகீம் உத்தரவிட்டது மர்ஹூம் அஷ்ரஃபுக்கு பிடிக்கவில்லை.

தன்னால் நியமிக்கப்பட்டு அதிகாரக்கதிரையில் அமர்ந்து கொண்டு தன்னையே உட்காரும் படி ஏவியது மர்ஹூம் அஷ்ரஃபை ஆத்திரப்பட வைத்தது.

மர்ஹூம் அஷ்ரஃப் நினைத்திருந்தால் குழுக்களின் பிரதித்தலைவர் பதவியிலிருந்த ரவூப் ஹகீமை பழிவாங்கியிருக்கலாம்.

குறைந்தபட்சம் குழுக்களின் பிரதித்தலைவர் பதவியிலிருந்தாவது நீக்க முயற்சித்து இருக்கலாம்.

ரவூப் ஹகீமின் விடையமாகட்டும், ஹிஸ்புல்லாவின் விடையமாகட்டும் மர்ஹூம் அஷ்ரஃப், அவர்கள் இருவரின் திறமைக்கே மதிப்பளித்தார்.

இருவரையும் அவர் தக்க வைத்துக்கொண்டார்.

பின்னாட்களில் அவ்விருவரைத்தான் தனது இரண்டு கட்சிகளுக்கும் செயலாளர்களாக நியமித்தார்.

ரவூப் ஹகீம் தான் செயலாளராக இருந்த கட்சிக்கு இன்று தலைவராகிவிட்டார்.

இன்றுவரை கட்சியை கட்டிக்காத்துக்கொண்டு வருகிறார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை ஏனைய கட்சி தலைமை போல் தூரநோக்கற்று சிறுபிள்ளைத்தனமாக இயங்கலாகாது. ●

# போர் பிரகடனம் இஸ்ரேலில் :

(14ம் பக்கத் தொடர்ச்சி)

5000 ஏவுகணைகள் இஸ்ரேலை நோக்கிப் பாய்ந்துள்ளது.

இதையடுத்து இஸ்ரேல் ராணுவம் நாட்டின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் சைரன் உதவியுடன் எச்சரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் போர் நிலையை இஸ்ரேல் அறிவித்துள்ள நிலையில், பொது மக்கள் அனைவரும் பதுங்கு குழிகளுக்கு அருகிலேயே இருக்குமாறும் எச்சரித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் ராணுவம், காசா பகுதியில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஏவுகணை தாக்குதல்கள் தொடர்ந்து நடந்து வருகிறது. மேலும், ஹமாஸ் அமைப்பினர் பல்வேறு இடங்கள் மூலம் இஸ்ரேல் எல்லைக்குள் ஊடுருவினர் என்று தெரிவித்துள்ளது.

**நூறாண்டுகளாக தொடரும் துயரம்:**

இஸ்ரேல் - பாலத்தீன முரண்பாடு நூறாண்டுகளாகத் தொடரும் துயரமும் ஆக்கிரமிப்பும் இன்னமும் தொடர்கிறது. நூற்றாண்டுகால மோதலாக பாலஸ்தீனம், மத்திய கிழக்கின் அந்த பகுதியை ஆண்டு வந்த ஓட்டோமான் அரசாட்சியை முதலாம் உலகப் போரில் வீழ்த்திய பின், அந்த பகுதி பிரிட்டனின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அந்த பகுதியில் யூத சிறுபான்மையினரும், அரபு பெரும்பான்மையினரும் குடிபுகுந்தனர்.

பாலத்தீனத்தில் உள்ள யூதர்களுக்கு, “தேசியப் பகுதி” ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற பொறுப்பை உலக நாடுகள் பிரிட்டனுக்கு வழங்கின. இதில்தான் பதற்றம் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டில் பெத்லஹாம் யூதர்களைப் பொறுத்தவரை அது அவர்கள் பூர்வீகம். ஆனால் பாலத்தீனிய அரபு மக்களும் அந்தப் பகுதிக்கு சொந்தம் கொண்டாடினர்,

**காசா கட்டுப்பாட்டை இழந்த இஸ்ரேல்:**

இப்போதய தாக்குதலால் இஸ்ரேலின் ஸ்டெரோட் என்ற பகுதியை ஹமாஸ் படையினர் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டதாகவும் சண்டையில் பலர் காயமடைந்ததாகவும் இஸ்ரேலிய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. மேலும், பாலஸ்தீனப் படையினர் இஸ்ரேலின் ஸ்டெரோட்டில் துப்பாக்கிச் சூடுகளையும் நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. காசா எல்லையில் இஸ்ரேல் ராணுவம் தனது கட்டுப்பாட்டை முற்றிலுமாக இழந்துள்ளதாகப் பல தகவல்கள் கூறுகின்றன.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. பாலஸ்தீனத்தின் மேற்குகரை மற்றும் காசா முனை பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது. இதற்கு இஸ்ரேல் தரப்பிலும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

**மீண்டும் போர் மூளும் அபாயம்:**

இந்த ராக்கெட் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே போர் வெடிக்கும் அபாயம் உருவாகி உள்ளது. கடந்த 2021 வருடம் போல் தற்போதும், அதேபோன்ற சூழ்நிலை உருவாகியுள்ளதால் மீண்டும் இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே மீண்டும் போர் மூளும் அச்சம் எழுந்துள்ளது.

மீண்டும் காசாவில் தொடங்கிய கடும் சண்டையால் முடிவிலா துயரில் பாலஸ்தீன மக்கள் அல்லல் படுகின்றனர். ஆனாலும் பாலஸ்தீன மண்ணில் ஆக்கிரமிப்பில் இஸ்ரேல் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்த நூற்றாண்டின் முடிவிலா துயரமாக நீண்டு கொள்கிறது.

2021 ஆண்டை போன்று மீண்டும் காசா முனையில் இருந்து இஸ்ரேல் மீது ராக்கெட் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. காசா முனையில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் ராக்கெட் தாக்குதல் நடத்தியுள்ளதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்டெரோட்டின் கிப்புட்ஸ் பகுதியில் பாலஸ்தீனிய ஹாமாஸ் படையினர் பல இஸ்ரேல் நாட்டினரைப் பிணையக் கைதிகளாகப் பிடித்து வைத்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளதுடன்,

இஸ்ரேலிய ராணுவத்தினருக்கும் பாலஸ்தீன போராளிகளுக்கும் இடையே காசா பகுதியில் கடுமையாக தாக்குதல் நடைபெற்று வருகிறது. ●

# ஜனாதிபதி ரணிலின் சீன பயணம் இலங்கைக்கான நன்மைகள் என்ன?

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சீனாவுக்கு செல்கின்றது. சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட சீன அரசின் முக்கியஸ்தர்களுடன் பீஜிங்கில் பரந்துப்பட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு பல்வேறு எதிர்பார்ப்புகளுடனேயே சீனா செல்கின்றது. அந்த வகையில் கடன் மறுசீரமைப்பு மற்றும் கடன் தவணைகள் உள்ளிட்ட தடைப்பட்ட திட்டங்களுக்கு நிதி பெறுதல் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் என்று பரந்துப்பட்ட இலக்குகளை உள்ளடக்கியதாகவே இந்தப் பயணம் அமைகிறது.

**கடன் மறுசீரமைப்பு**

குறிப்பாக சீன சந்திப்புகளின் போது கடன் மறுசரீமைப்புக்கான ஒத்துழைப்பு குறித்து ஜனாதிபதி ரணில் அந்நாட்டு தலைவர்களுடன் நேரடியாகவே கலந்துரையாட உள்ளார். ஏனெனில் சீனாவின் ஒத்துழைப்பு இன்றி பரிஸ் கழக நாடுகளினால் இலங்கையின் சர்வதேச கடன்கள் குறித்து பொது இணக்கப்பாட்டிற்கு வருவது கடினமாகியுள்ளது. ஆனால் இலங்கையின் சர்வதேச கடன் மறுசீரமைப்புகளில் ஏனைய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயல்படுவதை சீன விரும்ப வில்லை.

இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பரிஸ் கழக பிரதிநிதிகள் இலங்கையின் கடன் மறுசீரமைப்புகளை பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் சீனா தனித்து செயல்படுகின்றமையினால் இறுதி இலக்கை அடைவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வதில் சிக்கல்கள் ஏற்பட கூடும்.

**கடன் தவணைகள்**

எவ்வாறாயினும், கடன் தவணைகளை செலுத்துவதற்கான இரு வருட கால அவகாசத்தை சீன இலங்கைக்கு ஏற்கனவே வழங்கியுள்ளது. கொவிட் பெரும் தொற்று மற்றும் அதன் பின்னரான இலங்கையின் பொருளாதார - அரசியல் கொந்தளிப்புகளை கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய இந்த கால அவகாசத்தை சீனா வழங்கியிருந்தது.

ஆனால் எதிர்வரும் டிசெம்பருடன் குறித்த கால அவகாசம் நிறைவடைகின்ற நிலையில் ஜனவரியிலிருந்து கடன் தவணைகளை சீனாவுக்கு செலுத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதே வேளை சீன பயணத்தின்போது கடன் தவணைகளை மீள செலுத்துவதற்கான கால எல்லையை மீண்டும் வருடத்திற்கு நீடிக்கும் கோரிக்கையை இலங்கை முன் வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**முதலீட்டு இலக்குகள்**

புதிய முதலீடுகளை பெற்றுக் கொள்ளுதல், புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் மற்றும் தடைப்பட்ட திட்டங்களுக்கான நிதியை பெற்று மீண்டும் திட்டங்களை தொடங்குவது ஆகியவையும் சீன விஜயத்தில் ஜனாதிபதியின் முக்கிய இலக்குகளாக உள்ளன. குறிப்பாக கொழும்பு துறைமுக நிதி நகரத்திற்கான முதலீடுகளை விரைவுபடுத்த கலந்துரையாடப்படும்.

அதே போனடறு மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்திற்கான நிதியை பெற்று மீள ஆரம்பிப்பது குறித்து எக்ஸிம் வங்கியுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட உள்ளன. இதேவேளை மூலோபாய இருப்பிடம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான சாத்தியங்களுக்கு பெயர் பெற்ற ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் சீன பங்களிப்புடனான புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திரகரிப்பு நிலையத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஜனாதிபதியின் சீன விஜயத்தின் போது இறுதி செய்யப்படவுள்ளது. இந்த முதலீடு பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவது மட்டுமன்றி இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்தும்.

அத்துடன் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், பரந்த நுகர்வோர் சந்தை மற்றும் முதலீட்டுத் திறன் ஆகியவற்றுக்கு சீனாவுடன் வலுவான பொருளாதார உறவுகளை உருவாக்குவதற்கும் தனது இந்த விஜயத்தைப் பயன்படுத்துவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நோக்கமாகக் கொண்டுள்ளார்.

மேலும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது, முதலீட்டுக்கான புதிய வழிகளை ஆராய்வது, வர்த்தக ஒப்பந்தங்களை வளர்ப்பது மற்றும் முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியுதவியை பெறுதல் என்பவற்றை உள்ளடக்கியதாகவே இலங்கை குழுவின் சீன விஜயம் அமைந்துள்ளது. இதன் மூலம் பயனுள்ள கலந்துரையாடல்கள் மற்றும் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்தல், இலங்கை மக்களுக்கு அதிகரித்த வர்த்தக வாய்ப்புகள், தொழில் உருவாக்கம் மற்றும் ஒட்டுமொத்த நாட்டின் அபிவிருத்தி ஆகியவற்றிற்கு வழி வகுக்க ஜனாதிபதி முயல்கின்றமை வெளிப்படுகின்றது.

சீனாவுக்கான எதிர்பார்க்கப்பட்ட இந்தப் பயணம் இரு நாடுகளுக்குமே முக்கியமான ஒன்றாகியுள்ளது. இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சியின் புதிய அத்தியாயத்தை குறிப்பதாகவும் அமைகின்றது. ஒரு பாதை ஒரு மண்டலம் என்ற சீன முன்முயற்சி திட்டமும் உறுதி செய்யப்படும்.

மேலும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி சூரிய சக்தி திட்டத்தினை முன்னெடுப்பதற்காக 220 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க உறுதியளித்துள்ளது. அத்துடன் இலங்கையில் மின்சார இணைப்பு உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஏனைய திட்ட மேம்பாட்டு நோக்கங்களுக்காக கூடுதலாக 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி வங்கி விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

